



# மகாத்மாகாந்தி முதல் ராஜீவ்காந்தி வரை

கே.பி.நீலமணி

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# மகாத்மா காந்தி முதல்
# ராஜீவ் காந்தி வரை

[தாய் நாட்டிற்காகத் தியாகம் செய்த
தலைவர்களின் வீர வரலாறு]

கே. பீ. நீலமணி

காயத்ரி பப்ளிகேஷன்
26-B, வேதாசல கார்டன்ஸ்
மந்தைவெளி, சென்னை-600 028.

திப்பு : டிசம்பர் 1991

ஆசிரியருக்கு

விலை ரூ. 16-00

அச்சிட்டோர் :

வெற்றி அச்சகம்
91, டாக்டர் பெசன்ட் சாலை
இராயப்பேட்டை, சென்னை-600 014.

# பொருளடக்கம்


1. மகாத்மா காந்தி 9

2. ஆப்ரகாம் லிங்கன் 44

3. ஜான் எஃப். கென்னடி 62

4. மார்ட்டின் லூதர்கிங் 79

5. இந்திரா காந்தி 97

6. ராஜீவ் காந்தி 114

# அஞ்சலி

தியாக உணர்வும், தேசப்பற்றும், விடுதலை வேட்கையும் கொண்டு— மக்கள் நலனுக்காக வாழ்ந்து ரத்தம் சிந்திய அரசியல் தலைவர்கள் அறுவரைப் பற்றி இந்நூல் நினைவு கூறுகிறது.

இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகள் சோகம் நிறைந்தவை. மக்கள் நலனில் அக்கறை கொண்ட மாமனிதர்களும்; நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் சென்ற அரசியல் தலைவர்களும், சமூகத்தின் ஒப்பற்ற மேம்பாட்டிற் காக சாதனை புரிந்தவர்களும் கொடியவர்களின் கொலை வெறிக்கு ஆளாகி உயிர் துறந்தனர்.

அஹிம்ஸையைக் கற்றுத் தந்து—அதனால் சுதந்திரமும் பெற்றுத் தந்த அண்ணல் வாழ்ந்த புண்ணிய பூமியில்—வஞ்சகனது முதல் குண்டுக்கு அண்ணலே பலியானார்.

காந்திஜியைத் தொடர்ந்து, நேற்று இந்திரா காந்தி; இன்று ராஜீவ்காந்தி என்று கொலைப் பட்டியல் பெருகுவது ஆரோக்கியமான தேசத் திற்கு அழகல்ல. இந்நூலில் அத்தகைய மிருகத்

தனமான கொலை வெறிக்கு இலக்காகிய தலைவர்களின் வாழ்க்கை வரலாறு இடம் கிறது.

காந்தி மகானுடைய வாழ்க்கை ஒரு திறந் புத்தகம். அந்த மகானுடைய வாழ்க்கையின் மிகச் சில பக்கங்களிலேயே இந்நூலில் இடம் பெற்றிருந் தாலும், அறிந்ததும், அவரைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியவையும் இதில் உள்ளன.

வாழ்நாள் முழுதும் வெள்ளையரோடு அகிம்சைப்போர் தொடுத்து; இருண்ட இந்தி யாவை சுதந்திர ஒளி வெள்ளத்திற்கு மீட்டுத்தந்த தேசத் தந்தைக்கு; அன்னியர்களால் ஏற்படாத ஆபத்து கொடியவன் கோட்சேயினால் ஏற்பட்டது.

காந்திஜி ஒரு சமயம் எழுதியிருந்தார்: "யாரா வது என்னைக் கொலை செய்யும்போது என் உதட்டில் அந்தக் கொலையாளிக்கான பிரார்த் தனையுடன் நான் இறப்பானேயாகில், அதன் பின்னரே 'வீரனின் அஹிம்சையை' நான் அடைந் தவன் என்று சொல்லிக் கொள்ள முடியும்" என்றார். தாம் கூறியது போலவே காந்திஜி 'அஹம்சா வீரனாகவே' அமரரானார்.

★ **ம**னிதனை விலங்குகளைப் போல் விலைபேசி வாங்கி; அடிமைப்படுத்தி வாழ்ந்தவர்களிடமிருந்து அடிமைகளுக்கு விடுதலையளித்தவர் ஆப்ரகாம் லிங்கன். வறுமையையும், வேதனைகளையும்

...ருட்படுத்தாமல், அமெரிக்க மக்களின் நல்வாழ்...ாக உழைத்த லிங்கனும் ஒரு வெறியனின் ...ண்டுக்கு இரையானார்.

★ உலக சமாதானத்திற்கும், அமெரிக்க முன்னேற்றத்திற்கும் அரும்பாடுபட்ட இளம்வீரர்-குடியரசுத் தலைவர் கென்னடியை-ஆஸ்வால்டு என்ற கொடியவன் சுட்டுக் கொன்றான்.

★ கறுப்பர், என்றும், வெள்ளையர் என்றும் நிறத்தால் இனம் பிரித்து பேதம் பாராட்டி வந்த வெள்ளையருக்கு, "ஆண்டவனது படைப்பில் அனைவரும் சமமே" என்பதை உணர்த்திய மாமனிதர், மார்டின் லூதர் கிங்;

மனித உரிமைக்காகப் போராடி பல வெற்றிகளைக் கண்ட மார்டினையும் ஒரு கொலைகாரன் சுட்டுக் கொன்று விட்டான்.

★ தியாகப் பரம்பரையில் வந்து மாதர் குல மாணிக்கமாய்—எதற்கும் அஞ்சாத வீராங்கனையாய்; இந்தியாவின் ஜோதியாய் விளங்கியவர் இந்திராகாந்தி.

இந்தியாவின் நலனையே உயிர் மூச்சாகக் கொண்டு பல அரிய சாதனைகளை நிகழ்த்தியவர்.

வாழ்நாளெல்லாம் ஏழை எளிய மக்களின் நலனிலேயே அக்கறை கொண்டிருந்த அந்தத்

தாயுள்ளத்தை அவரது இரண்டு மெய்க்காவலர்களே 16 குண்டுகளால் துளைத்தெடுத்து இரத்த வெள்ளத்தில் வீழ்த்தி விட்டனர்.

எவ்வளவு பெரிய நம்பிக்கைத் துரோகத்திற்கு அன்னை இந்திரா இரையாகி விட்டார் என்பதை எண்ணும் போது விழிகள் குளமாகின்றன.

★ இந்தியாவின் இதயஜோதியாக விளங்கிய தன் அருமை தாய் மறைந்த சோகத்தை விழுங்கிக் கொண்டு அந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர் ராஜீவ்காந்தி, ஐந்தாண்டு கால ஆட்சியில் அவர் மேற்கொண்ட தொண்டும் அரசியல் நடவடிக்கைகளும்; நாட்டில் எழுந்த வன்முறைகளைத் திறம்பட அவர் அடக்கிய தீரமும்; அவரது நிர்வாகத் திறமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தன.

சிரித்த முகத்துடன் அனைவரிடமும் அன்பொழுகப் பேசும் குழந்தை உள்ளம் படைத்த ராஜீவ்காந்தி சதிகாரியின், குண்டுக்கு தமிழ் மண்ணில் பலியாகி விட்டார்.

வள்ளுவப் பெருந்தகை அவர்கள் 'கூடா நட்பு' என்னும் அதிகாரத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"தொழுத கையுள்ளும் படை
யொடுங்கும், ஒன்னார்;
அழுத கண்ணீரும் அனைத்து"

தாழுவதற்காக பகைவர் குவித்த கைக்குள் படைக்கலம் மறைந்திருக்கும்; அவர் க்வர்) அழுகின்ற கண்ணீரும் அத் தன்மை டையதே''—

—ஜானகிநீலமணி
பதிப்பாளர்

''வன்முறைகள் மூலம், அதுவும் தலைவர் களைச் சுடுவதின் மூலம் அரசியல் லட்சியங்களை அடைய முடியும் என்று யாராவது நம்பினால் அந்த நம்பிக்கை பொய்த்து விடும். ஏனென்றால், பொதுவாக இந்திய மக்கள் வன்முறைச் செயல் களை வெறுப்பவர்கள், இத்தகைய வன்முறைச் செயல்களால் மக்கள் கருத்து வன்முறையாளர் களுக்கு எதிராகவே உருவாகும் என்பது நிச்சயம்''

நன்றி.

—தினமணி, நவம்பர், 1, 1984

# மகாத்மா காந்தி முதல் ராஜீவ் காந்தி வரை

---

## மகாத்மா காந்தி

## (1869 — 1948)

"தாய் நாட்டின் சேவைக்காக என் வாழ்வு அனைத்தையும் நான் அர்ப்பணித்திருக்கிறேன்—இந்த சேவை இல்லாவிடில் என் வாழ்க்கையே எனக்குத் தாங்க முடியாத சுமையாகிவிடும்."

—காந்திஜி

குஜராத் மாநிலத்தில் உள்ள போர்பந்தர் என்னும் ஊரில் 1869-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ஆம் தேதி மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி பிறந்தார். தந்தையின் பெயர் கரம்சந்த் உத்தம்சந்த் காந்தி. இவரது மனைவி புத்லி பாய்க்கு, நான்காவது மகனாக காந்தி பிறந்தார், தந்தை போர்பந்தர் சமஸ்தானத்து திவானாகப் பணி புரிந்தார்.

காந்தியின் தாயார் மிகவும் தெய்வ பக்தி [illegible]தவர். எல்லோரிடமும் அன்பாகப் பழகுவார் [illegible]ந்து சமயப் பற்று மிக்கவர்.

காந்திஜி அவ்வூர் தொடக்கப் பள்ளியில் சேர்ந்து படித்தார். காந்திஜி மிகவும் அடக்கமான சுபாவமுடையவராய் இருந்தார். அதனால் மற்ற மாணவர்களுடன் சேர்ந்து விளையாடுவதோ, பொழுது போக்குவதோ இல்லை. ஆனால் சிறு வயதிலிருந்தே நேர்மையாகவும் சத்யவானாகவும் இருந்தார்.

காந்திஜியின் தந்தை ராஜ்கோட் நகருக்கு திவானாக மாறினார். குடும்பமும் ப்பார்பந்தரை விட்டு ராஜ்கோட்டிற்கு மாறியது.

காந்திக்கு ஏழு வயது நடந்து கொண்டிருந்த போது, அவரது தாயார் மகனுக்குத் திருமணம் செய்து வைத்து பார்க்க வேண்டுமென்று ஆசைப் பட்டார்.

காந்திஜி இருந்த தெருவில்தான் கஸ்தூரி பாயின் குடும்பமும் இருந்தது. இரு குடும்பத்தின ரும் உறவினர். சிறுவயதிலிருந்தே காந்தியும் கஸ்தூரிபாயும் ஒன்றாக விளையாடிக் கொண் டிருப்பார்கள். இருவருக்கும் ஒரே வயது. கஸ்தூரியைத் தன் மகனுக்கு முடித்துவிட வேண்டும் என்று புத்லிபாய் விரும்பினார்.

ஒருநாள் கஸ்தூரியின் வீட்டிற்கு, காந்தியின் பெற்றோர்கள் பெண் கேட்டுச் சென்றார்கள்.

எல்லோருக்கும் சம்மதம். வீட்டில் என்ன நடக்கிறது; ஏன் இவர்கள் எல்லாம் வந்திருக்கிறார்கள் என்றுகூட கஸ்தூரிபாய்க்குப் புரியவில்லை.

புரோகிதர் வந்ததும் ஏழுவயது காந்திக்கும், ஏழு வயது கஸ்தூரிக்கும் நிச்சயதார்த்தம் நடந்து முடிந்தது.

நிச்சயதார்த்தம் நடந்த ஆறு வருஷங்களுக்குப் பிறகு அதாவது, காந்தியின் 13-வது வயதில் அவருக்கும் கஸ்தூரிபாய்க்கும் திருமணம் நடைபெற்றது,

1887-ல் காந்திஜி தமது 18-வது வயதில் மெட்ரிகுலேஷன் தேர்வு பெற்றார். பின்னர் கல்லூரிப் படிப்பிற்காக 'பவநகர்' என்னும் ஊருக்கு பெற்றோரை விட்டு முதன்முறையாகச் சென்றார்; ஆனால், காந்திஜி முதலாண்டுக்குப் பிறகு அக் கல்லூரி செல்ல விரும்பவில்லை.

மேற்கொண்டு என்ன செய்வது என்று தந்தை யோசித்தார். எப்படியாவது படிப்பைத் தொடர வேண்டுமே!

காந்திஜியின் தந்தைக்கு வேண்டிய ஒருவர் "காந்தியை இங்கிலாந்து அனுப்புங்கள்; பாரிஸ்டராக வரட்டும்," என்றார். காந்திஜிக்கு இந்த யோசனை மிகவும் பிடித்திருந்தது. உறவினர்கள் புத்லிபாயிடம், 'காந்திஜியை லண்டனுக்கு சட்டப் படிப்பு படிக்கஅனுப்புமாறு' கூறினர். இங்கிலாந்து செல்ல காந்தியும் விரும்பினார்.

தாயாருக்குப் பிள்ளையைக் கண்காணாத தசத்திற்கு அனுப்பப் பயமாயிருந்தது. இந்த யத்தில் காந்தியின் தந்தை இறந்து விட்டார்.

காந்திக்கு சட்டம் படிக்க வேண்டும் என்கிற ஆசை இருந்தது. தன் அம்மாவின் தயக்கத்தை உணர்ந்த காந்திஜி "அம்மா நான் எங்கிருந்தாலும் உன் நினைவாகவும். கஸ்தூரியின் நினைவாகவும் தான் இருப்பேன்; அயல்நாடு போனாலும் மது, மாமிசம் எதையும் விரலாலும் தொட மாட்டேன். கஸ்தூரியைத் தவிர வேறு ஒரு பெண்ணை மனத்தாலும் நினைத்துப் பார்க்க மாட்டேன்" என்று சத்தியம் செய்து கொடுத்தார்.

தாயார் சமாதானமடைந்ததும், காந்திஜி விடைபெற்றுக் கொண்டு இங்கிலாந்து வந்து சேர்ந்தார்.

சுத்த சைவத்தைத் தழுவியிருக்கும் காந்திஜி அங்கு ஆரம்பச் சில நாட்கள் சாப்பாட்டிற்கு மிகவும் கஷ்டப்பட்டார். பிறகு விரைவிலேயே சுயமாகச் சமைக்கக் கற்றுக் கொண்டு விட்டார். சிக்கனமாக வாழ்ந்து, பணத்தை மிச்சம் பிடித்து நிறைய நூல்கள் வாங்கி இடைவிடாமல் படித்தார் அதில் அவர் மனதைக் கவர்ந்த புத்தகம் பகவத் கீதை. கஷ்டப்பட்டு பரீட்சைக்குப் படிக்கும்போது கூட நிதம் கீதையின் சில பகுதிகளை காந்திஜி படிப்பது வழக்கம்.

கடைசியில் பரீட்சை முடிந்தது. 18[illegible] ஆண்டு ஜூன் மாதம் 10-ம் தேதி கா[illegible] பாரிஸ்டர் ஆனார்.

நான்கு வருட சட்டப் படிப்பை முடித்து[illegible] கொண்டு பெற்றோரைப் பார்க்கும் ஆவலுடன் 1891-ல் காந்திஜி இந்தியா திரும்பினார். ஆனால்—

—இங்கு வந்த பிறகு தான் அவரது அருமை அன்னை புத்லிபாய் இறந்து விட்ட செய்தி அறிந் தார். அதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு தான் அவருடைய தந்தையும் காலமாகி விட்டார். இப்போது காந்திஜிக்கு தாயும் இல்லை; தந்தையும் இல்லை. அம்மாவைப் பார்க்க வேண்டும்; தான் பாரிஸ்டர் ஆகி விட்டதையும்; அவளுக்குச் செய்து கொடுத்த சத்தியத்தையும் தவறாமல் நிறை வேற்றியதையும் சொல்லி தாயை ஆனந்தமடையச் செய்யவேண்டும் என்று எவ்வளவோ ஆவலாக வந்தார் பாவம்!

பெற்றோரை இழந்த துயரத்தை காந்திஜி மெல்ல மறக்கப் பழகினார். அடுத்த சில வருடங் களில் ராஜ்கோட்டிலும், பம்பாயிலுமாக மாறி மாறி ஒரு வக்கீலாகத் தொழில் நடத்தினார்.

தொழில் சிறப்பாக நடக்கவில்லை; மேலும் அது அவரது மனதிற்கும் பிடிக்கவில்லை. ஆயினும் பொய்யின்றி, தன் மனதிற்குச் சத்தியமாகப் படு கின்ற வழக்குகளை மட்டுமே ஏற்று நடத்தினார் இந்த சமயத்தில்—

தென்னாப்பிரிக்காவிலிருந்து தனது கம்பனி வியாபார விஷயமாக கலந்தாலோசிக்க அப்துல்லா என்பவர் காந்திஜியை அழைத்தார்.

காந்திஜி மகிழ்ச்சியுடன் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு தென்னாப்பிரிக்கா புறப்பட்டுச் சென்றார். அப்போது அவருக்கு வயது 22.

அங்கு சென்றதும் தென்னாப்பிரிக்காவில் வசிக்கும் இந்தியர்கள் மிகவும் குறைந்த கூலிக்கு கடினமான வேலைகளைச் செய்து கொண்டும்; நிற வேற்றுமை காரணமாக — வெள்ளையர்களால் 'இந்திய கூலிகள்', என்று கேவலமாக நடத்தப் படுவதையும் நேரில் கண்டார். அந்த மக்களின் துயர் துடைக்க அவர் மனம் தவித்தது.

நாளடைவில் காந்திஜி அங்குள்ள, இந்தியர் களின் வக்கீலானார். சட்டங்கள் எதுவும் இந்திய ருக்குச் சாதகமாக இல்லை. காந்திஜியைக் கூட, 'கூலிகளின் வக்கீல்', என்று தான் வெள்ளையர் அழைத்தனர்.

தென்னாப்பிரிக்கா வந்த முதல் வாரத்தில் காந்திஜி டர்பனிலுள்ள நீதி மன்றத்திற்குச் சென்றார். காந்திஜி கீழே சூட்டும்; தலையில் தலைப்பாகையும் வழக்கம் போல் அணிந்து வந்தார். ஆனால் நீதிமன்ற அறைக்குள் போனதும் மாஜிஸ்திரேட் காந்தியிடம், 'உடனே தலைப் பாகையை அகற்றும்படிக் கட்டளை இட்டார்.

இதன் காரணம் என்ன என்று காந்திஜிக்கு வி[illegible]
வில்லை.

"நான் ஏன் என் தலைப்பாகையை எடு[illegible]
வேண்டும்?' என்று கேட்டார். "அது முடியாது"
என்று உறுதியாகக் கூறிவிட்டு வெளியே வந்து
விட்டார்.

இதுதான் பிரிட்டிஷாருடன் அவர் நடத்திய முதல் சண்டையாகும். பிறகு வெளியே வந்த காந்திஜியிடம் அப்துல்லா ஸேத் "இங்கு முஸ்லிம் உடை அணிந்திருப்பவர்கள். மாத்திரமே தலையில் தலைப்பாகை அணிந்து கொள்ளலாம். ஆனால் ஹிந்துக்கள் தலையில் தலைப்பாகை வைத்துக் கொள்ளக் கூடாது. தென் ஆப்பிரிக்காவிலுள்ள எல்லா நீதி மன்றங்களிலும் இது சட்டம்." என்று விளக்கினார்.

இதைக் கேட்ட காந்திஜி கோபமும், எரிச் சலும் அடைந்தார். தன்மான உணர்ச்சி அவரை வெகுவாக பாதித்தது. ஆயினும் தென்னாப்பிரிக்க இந்தியர்களுக்கு உதவுவதற்காக அவர் எதையும் சகித்துக் கொள்ளத் தயாரானார்.

'ஒரு வக்கீல் கோர்ட்டைப் பகிஷ்கரிக்க எண்ணுவது அறியாமை; அதைவிட ஆங்கிலத் தொப்பி அணிந்து விடுவதே மேல்', என எண்ணி னார்.

நீதிமன்ற நிகழ்ச்சியைத் தொடர்ந்து காந்திஜி யின் தன்மான உணர்ச்சியையும்; உள்மனத்தையும்

...ாகப் புண்படுத்திய இன்னொரு சம்பவமும் ...விலேயே நடந்தது.

ஒரு நாள் காந்திஜிக்கு ஒரு வழக்கு சம்பந்தமாக டர்பனிலிருந்து பிரிடோரியாவுக்குப் போக நேர்ந்தது. முதல் வகுப்பு டிக்கெட் வாங்கிக் கொண்டு பிரயாணம் செய்தார். வண்டி நடுநிசியில் நேடாலின் தலைநகரான 'மாரிட்ஸ் பர்க்'கை அடைந்தது. அப்போது காந்திஜி உட்கார்ந்திருந்த கம்பார்ட்மெண்டுக்குள் நுழைந்த ஒரு தென்னாப்பிரிக்க வெள்ளையன் காந்திஜியை இந்தியன் என்று கண்டு கொண்டான்.

உடனே, அவன், காந்திஜியை நோக்கி "நீ இங்கே உட்காரக் கூடாது, வேறு கம்பார்ட்மெண்டுக்குப் போ," என்று விரட்டினான்.

காந்திஜி அமைதியாக அவனிடம் டிக்கெட்டைக் காண்பித்து, "நான் முதல் வகுப்பு டிக்கெட் வைத்திருக்கும் போது ஏன் வேறு கம்பார்ட்மெண்டுக்குப் போக வேண்டும்." என்று கேட்டார்.

வெள்ளையன் கோபத்தோடு வெளியேறி அதிகாரிகளை அழைத்து வந்தான். அதிகாரிகளோ, சற்றும் இரக்கம் இல்லாமல், "இந்தியர்கள் முதல் வகுப்பில் பிரயாணம் செய்ய உரிமை கிடையாது; உடனே வேறு இடம் போய் விடு" என்று விரட்டினர். காந்திஜி இறங்க மறுக்கவே, அந்த வெள்ளையர்கள் அவரது பெட்டி படுக்கைகளை பிளாட்பாரத்தில் வீசி எறிந்தார்கள். காந்திஜியையும் கீழே இறக்கி விட்டு விட்டனர்.

ரயில் புறப்பட்டுப் போய் விட்ட... பெய்து கொண்டிருந்த அந்த இரவு முழு... காந்திஜி அந்த பிளாட் பாரத்திலேயே கழி...

ஒவ்வொரு விஷயத்திலும் தென்னாப்... கர்கள் இந்தியர்களிடம் எவ்வளவு மோசமாக நடந்து கொள்கிறார்கள் என்பதை காந்திஜி நேரில்கண்டார்.

'இப்படித்தானே தன்னைப் போல் மற்ற இந்தியர்களும் அவதிப்படுகிறார்கள்,' என்று எண்ணியபோது, அவர்களுக்காக ஏதாவது நன்மை செய்யாமல் இந்தியா செல்வதில்லை என உறுதி பூண்டார்.

1894-ம் ஆண்டு காந்திஜி நேட்டால் இந்திய காங்கிரஸ் மகாசபையை ஏற்படுத்தினார். பொது நலத் தொண்டோடு வக்கீல் தொழிலும் நடத்தி வந்தார்.

1896-ம் ஆண்டு ஒரு முறை இந்தியாவுக்கு வந்து மனைவியையும், குழந்தைகளையும், தன்னோடு நேட்டாலுக்கு அழைத்து வந்தார்.

காந்திஜிக்கு அப்போது இரண்டு புதல்வர்கள். மூத்தமகன் ஹரிலால்; இளையவன் மணிலால் பிற்காலத்தில் அவருக்கு, ராம்தாஸ்; தேவதாஸ் என்று இரண்டு மகன்கள் பிறந்தனர்.

தென்னாப்பிரிக்காவில் டர்பன் நகரில் காந்திஜி ஒருபகுதி அண்டுகள் இருந்தார். அங்குள்ள இங்கி

க்கு இழைக்கப்படும் அநீதிக்கும், கொடுமை றும் தொடர்ந்து வாதாடினார்.

அங்குள்ள இந்தியர்கள் காந்திஜியைத் தங்கள் லவராகக் கருதி மதித்தனர். அவரிடம் அள வற்ற அன்பும், முழு நம்பிக்கையும் கொண்டனர்.

1906-ல் தென்னப்பிரிக்கா இந்தியருக்கும் அரசாங்கத்திற்கும் அடிக்கடி பூசல் உண்டாயிற்று. அதில் தாமே தலைமை ஏற்றுப் போராடி சிறைப் பட்டுப் பல துன்பங்களை அனுபவித்தார். பின்னர் அரசாங்கத்தார் இணங்கி வரவே விடுதலை யானார்.

1914-ல் காந்திஜி தாயகம் திரும்பினார். இந்தி யாவில் சுதந்திரப் போராட்டம் நடந்து கொண்டி ருந்தது.

கோபால கிருஷ்ணகோகலேவை காந்திஜி அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார். அவரோடு இணைந்து இந்திய விடுதலைக்கான வழிகளை ஆராய்ந்தார்.

அடுத்த ஆண்டு ஆமதாபாதில் ஆசிரம் ஒன்றை ஆரம்பித்தார்.

அதில். 'உண்மை, தன்னலமற்ற தன்மை, நாட்டுக்கு உழைத்தல், பிறருக்கு கேடு செய்யாமை, முதலிய நற்பண்புகள் உடையவர்களே சேரத் தக்கவர் என்று அறிவித்து; அவ்விதமே நிகழச் செய்து, தன்னல மற்ற சேவை செய்து வந்தார்.

இந்த சமயத்தில் ஐரோப்பாவில் [illegible] ஆரம்பமானது. அந்தப் போருக்கு ஆள் உ[illegible] பொருள் உதவியும் செய்ய இந்திய அரசு [illegible] யது. அது பற்றி யோசிக்க டெல்லியில் வைசி[illegible] தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்ட காந்திஜி, "நாங்கள் போரில் உங்களுக்கு உதவத் தயார்; ஆனால் வெற்றி பெற்ற பின்னால் எங்களுக்கு ஆட்சி யுரிமை அளிக்க வேண்டும்" என்ற நிபந்தனையை விதித்தார்.

அரசாங்கத்தார் அதற்கு இசைந்த உடனே இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற் கொண்டு, ஆயிரக் கணக்கான இந்திய வீரர்களைப் போரில் கலந்து கொள்ளச் செய்தார்.

போர் முடிந்தது. ஆனால், சொன்னபடி முழு சுயாட்சி அளிக்காமல்; அரசாங்க அலுவல்களில் இந்தியர் சிலரை நியமித்ததோடு இருந்து விட்ட னர், இது காந்திஜியின் மனதிற்கு மிகுந்த வேத னையையளித்தது.

மன அமைதி கொள்ளாத காந்திஜி இனி அரசோடு ஒத்துழைப்பதில்லை என்று ஒத்துழை யாமை இயக்கத்தை நடத்தினார்.

அப்போராட்டம் காரணமாக பலமுறை சிறை சென்றார். பல துன்பங்களை அனுபவித் தார்.

...பினும் பிரிட்டிஷரோடு போராடாமல் ...சை வழியிலே வெல்ல வேண்டும் என விரும் ...ர.

'அன்னிய துணிகள் பகிஷ்காரம்'' என்று ஒரு அறிக்கை விடுத்தார். "அன்னியத் துணிகளை உடுப்பதை விடுத்து; அவற்றைக் கொளுத்தி விடக் கோரி'' நாடெங்கும், பிரசாரம் செய்தார்.

இந்த சமயம் 2-வது உலகப் போர் வந்தது இம்முறை அரசுடன் ஒத்துழைப்பதில்லை என்று உறுதி பூண்டார்.

இதனால் காந்திஜி நேரு போன்ற தலைவர் கள் சிறையிலிடப்பட்டனர். சிறையில் காந்தி யுடனிருந்த கஸ்தூரிபா காந்தி உடல் நலம் குன்றி 1944 பிப்ரவரி 22-ம் தேதி மகாசிவ ராத்திரியன்று உயிர் நீத்தார். போரின் இறுதியில் விடுதலை பெற்றனர்.

இதன் பிறகு இந்தியாவிற்கு உரிமை தருவது பற்றி ஆராய பிரிட்டிஷ் அரசு ஒரு தூதுக் குழுவை அனுப்பியது. அப்பொழுது இந்திய முஸ்லீம்கள் சார்பாக, முஸ்லீம்கள் வாழும் மாகாணங்களை 'பாகிஸ்தான்' என்கிற பெயரில் பிரித்துத் தர வேண்டும் எனக் கோரி ஜனாப் ஜின்னா வாதித் தார்.

இந்து—முஸ்லீம் என்று இந்தியாவை இரு துண்டாகப் பிரிக்க இந்தியத் தலைவர்கள் ஒப்ப

வில்லை. இதனால் இந்து—முஸ்லீம் கலவரங்கள் தோன்றின.

அந்தக் கலவரம் மிகக் கடுமையாக வங்காள மாகாணத்தில் நடைபெற்றது. ஏராளமான இந்து, முஸ்லீம் மக்கள் கொல்லப் பட்டனர். இதைக் கண்டித்து காந்திஜி உபவாசம் இருந்து கலவரங் களை அடங்கச் செய்தார். வங்க படுகொலையைக் கண்டு மனம் நொந்து பாகிஸ்தான் பிரிவிற்கு சம்மதித்தார். அப்போது லார்ட் மௌண்ட் பாட்டன் வைசிராயராக இருந்தார்.

இங்கிலாந்திலிருந்து வந்த தூதுக் குழு இந்தியாவை இரண்டாகப் பிரித்தது.

மேற்குப் பஞ்சாப், சிந்து, வடமேற்கு எல்லைப் புற மாகாணம், கிழக்கு வங்காளம் ஆகியவற்றைக் கொண்டு பாகிஸ்தான் அமைந்தது. அதன் பிறகு

1947-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ம் நாள் டில்லி யைத் தலைநகராகக் கொண்ட இந்தியப் புதிய ஆட்சி—இந்தியரின் சுதந்திர ஆட்சி ஏற்பட்டது.

இந்திய அரசின் பிரதமராக நேரு பதவி ஏற்றார். பாகிஸ்தானுக்கு ஜின்னா தலைமை ஏற்றார்.

ஆகஸ்ட் 14-ம் தேதி இரவு இந்திய உரிமை விழா—மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. காந்தி அடிகள் தமது வாழ் நாள் புனிதம்

...து விட்டதாக; தமது சத்தியமும் அஹிம்சை ...ன் பெற்றதாக எண்ணி மகிழ்ந்தார்.

இந்தியா சுதந்திரமடைந்த ஒரு மாதத்திற்குள் கிழக்கு பஞ்சாபில் முஸ்லீம் அல்லாதாரின் போராட்டம் தோன்றி படுகொலைகள் நிகழ்ந்தன.

காந்திஜி இதனால் மிக மனம் வருந்தி "இந்து முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்தி; தோழமை கொண்டு வாழ 'நவகாளி' "பாத" யாத்திரையை மேற் கொண்டார்.

அவரது உபதேசத்தைப் பலர் ஏற்றும்; சிலர் வெறுத்தும் காந்திஜியிடம் கோபமுற்றனர்.

இதன் விளைவாக அவரது பிரார்த்தனைக் கூட்டத்தின் நடுவே 1948-ஜனவரியில் ஒரு குண்டு வெடித்தது. அவர் உயிர் தப்பினார். ஆனால் அதே 1948-ஜனவரி 30-ம் நாள் காந்திஜி பிரார்த்தனைக் கூட்டத்திற்குச் செல்லும் போது, கோட்ஸே என்னும் ஒரு கொடியவன் அவரது கால்களைத் தொட்டு வணங்கி விட்டு; மார்பில் மூன்று குண்டு களைப் பாய்ச்சினான்.

'ஹேராம்' என்று கூறியவாறே காந்திஜி மண்ணில் ரத்த வெள்ளத்தில் சாய்ந்தார்.

அஹிம்சா மூர்த்தியாக வாழ்ந்த காந்திஜி மறைந்தாலும் அவர் மக்களுக்குப் புகட்டிய சத்தியமும், அஹிம்சையும் ஒளி விளக்காக என் றென்றும் உலகில் பிரகாசித்துக் கொண்டிருக்கும்.

**கலையும்—**
**கலைஞர்களும்—**
**காந்திஜியும்**

"மனிதர்களிடம் உள்ள நல்ல பண்புகளைத் தூண்டி விடுபவனே கவி," என்ற கருத்தைத்தான் காந்திஜி தீவிரமாகக் கொண்டிருந்தார்.

கலையின் உயர்ந்த பட்சமான பயனும் அதுவே நல்வழி காட்டுதலைத் தவிர—கலை வேறு எதற்கும் பயன் படுவதை அவரால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

'எந்த சந்தர்ப்பத்திலும் நன்னெறி வழி நடப்பதைக் கைவிடாத திடசித்தம்; எதன் பொருட்டும்; எந்த சந்தர்ப்பத்திலும் உண்மையைத் தவிர வேறொன்றைப் பற்றிப் பேசுவது தீயது', என்ற எளிய சித்தாந்தத்தையும்காந்திஜி மனத்தில்-இளம் வயதில் அவர் பார்க்க நேர்ந்த அரிச்சந்திரா என்னும் நாடகம் ஏற்படுத்தியது. மனிதன் கடைப் பிடிக்க வேண்டிய அடிப்படையான நோக்கத்தை, நாடகம் காந்திஜிக்கு உணர்த்தி விட்டது. கலையின் பயன் எது என்பதை அனுபவ ரீதியிலும் மகாத்மா கண்டுகொண்டு விட்டார்

அவர் உள்ளொளியின் பிரகாசத்தைச் சுடர் விடச் செய்தது அரிச்சந்திர புராண நாடகம். அதிலிருந்து கற்ற படிப்பினையை வாழ்க்கையில் மட்டுமன்றி; அரசியலிலும் கடைப் பிடித்தார். அவற்றையே ;முற்றிலும் எதிரான; மற்றும்

...ன செயல்களைக் கொண்டவர்களிடமும் ...கப் படுத்தினார்.

**...திரிகை ஆசிரியராக காந்திஜி**

மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளுவதற்கு பத்திரிகை ஒரு சிறந்த சாதனம். இதை காந்திஜி நன்கு உணர்ந்திருந்தார்.

இந்தியர்களைப் படுமோசமாக நடத்தும் தென்னாப்பிரிக்க அரசைக் கண்டித்து எழுத, 'ஜோகனிஸ் பர்க்', என்னும் நகரத்திலிருக்கும் போது, ' இந்தியன் ஒபீனியன்" என்னும் ஒரு பத்திரிகையை காந்திஜி முதன் முதலில் துவக்கினார். 1919-இல், "யங் இந்தியா" "நவ ஜீவன்", என்னும் பத்திரிகைகளைத் துவக்கினார். "ஹரிஜன்", "ஹரிஜன் சேவக்", "ஹரிஜன் பந்து" போன்ற தேசிய வார ஏடுகளில் ஒவ்வொரு வாரமும் நடந்தவற்றையும்; நடக்க வேண்டிவை பற்றிய தம் கருத்துக்களையும் மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறினார்.

"விலைக்கட்டுப் பாட்டின் அவசியம், "அமைதி காத்தல்", "அன்னியத் துணிகளை தீண்டாமல் ஒதுக்கி, அவற்றை தீயிலிட்டுப் பொசுக்கும் திட்டம்"; போன்ற பல பிரச்னைகள் குறித்து எழுதி மக்கள் கடமையை உணர்த்தினார். காந்திஜியின் எழுத்து மக்களை தட்டி எழுப்பின.

"இந்தியாவை விடுதலை செய்" என்று பிரிட்டனுக்கு தாம் விடுத்த வேண்டுகோளின் பொருளை உலகத் தலைவர்களும் புரிந்துகொள்ளும்படி விளக்கி எழுதினார்.

"எல்லா ஆசிய நாடுகளின் விடுதலைக்கும் இந்தியாவின் சுதந்திரம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கட்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

**அற்புத எழுத்தாளராக காந்திஜி**

சிறந்த வழிகாட்டியாகவும், பெரிய அரசியல் வாதியாகவும் திகழ்ந்த காந்திஜி மிகச் சிறந்த எழுத்தாளராகவும் திகழ்ந்தார். ரத்தினச் சுருக்க மாகவும்; பொருள் பொதிந்த கடிதங்கள் எழுது வதிலும் அவர் பேர் பெற்றவர். ஒரு சில வார்த்தைகளிலேயே, பெரிய உண்மைகளை விளக்கிச் சொல்லும் தனித்தொரு ஆற்றல் பெற்றிருந்தார்.

பிழையின்றியும், அடித்தல் திருத்தல் இல்லாமலும், துரிதமாகவும் எழுதுவதில் காந்திஜி வல்லவர்.

அவர் தமது வலக்கையைப் போலவே இடது கையாலும் எழுதும் ஆற்றல் பெற்றவர். 1909-ல் தென் ஆப்பிரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்குக் கப்பலில் பயணம் செய்தபோது, 'ஹிந்த் ஸ்வராஜ்யா' என்னும் நூலை எழுதி முடித்தார்.

ந்நூல் காந்திஜியின் கையெழுத்தில் 275, க்கங்களையுடையது.

காந்திஜி கண்காட்சியில் இடம் பெற்றுள்ள இந்நூலில்; மூன்றே இடங்களில்தான் அடித்தல் இருக்கிறது என்பதைக் காணும்போது, காந்திஜி யின் திடசித்தத்தையும், தெளிவான சிந்தனை யையும் கண்டு வியக்காமல் இருக்க முடியுமோ?

**தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கிய தந்தை**

தான் பிறந்த நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்த காந்தி மகான்; அது மட்டுமே தம் பணி என்று கருதவில்லை. இனம், மதம். மொழி இவற்றை மறந்து இந்தியாவிலுள்ள கோடானு கோடி மக்களும் சகோதரர்போல் ஒற்றுமையாக வாழவேண்டும் என்று கனவு கண்டார். தான் எண்ணியதையே செயலில் காட்டி தேசிய ஒருமைப் பாட்டை வளர்த்தார்.

எந்த மொழி பேசுபவராக; எந்த மாநிலத்தில் பிறந்தவராக இருந்தாலும் அவர்கள் அனைவரும் இந்தியச் சகோதரர் என்கிற எண்ணத்தை மக் களுக்கு ஊட்டினார். அதையே தம் வாழ்வின் இலட்சிய மூச்சாகவும் கடைப்பிடித்து வந்தார்.

இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்காக காந்திஜி கால மெல்லாம் பாடுபட்டார். அதற்காக அவர் மேற்

கொண்ட 'நவகாளி யாத்திரை' உப்புச் சத்தியா கிரகத்தைப் போலவே சரித்திரப் புகழ் பெற்றது.

தான் ஒரு ஹிந்துவாக இருந்தும் எம்மதமும சம்மதம் என்கிற கொள்கை உடையவர். கீதையில் தமக்குள்ள ஈடுபாட்டுடனேயே குரானையும், பைபிளையும், கற்றுணர்ந்தவர்.

**காந்திஜி**
**"மகாத்மா" ஆனார்!**

1915-ஆம் ஆண்டு ஜனவரி 27-ஆம் தேதி, கோண்டல் என்ற சுதேச சமஸ்தானத்துக்குக் காந்திஜி சென்றிருந்தார். தென்னாப்பிரிக்காவில் இன வேற்றுமையை எதிர்த்து, காந்திஜி நடத்திய போராட்டத்துக்குக் கோண்டல் மகாராஜா பெரும் ஆதரவு அளித்ததால் நன்றி தெரிவிக்கக் காந்திஜி அங்கே சென்றார்.

கோண்டல் சமஸ்தான திவான் ஆர்.வி. பட்டாரி தலைமையில் அளிக்கப்பட்ட வரவேற்பின் போது, வைத்யராஜ ஜீவராம் காளிதாஸ் சாஸ்திரி, காந்திஜிக்கு "மகாத்மா" என்ற பட்டத்தைச் சூட்டினார்.

இந்த விவரத்தை பம்பாய் தொழிலதிபர் திரு. மனுபாய் பிமானி தெரிவித்தார்.

வரவேற்பின் போது சமஸ்கிருத வித்வானான ஜீவராம் காளிதாஸ் சாஸ்திரி காந்திஜியைப் புகழ்ந்து பல பாடல்களைப் பாடினார். ஒரு

பாடலில் காந்திஜியை 'மகாத்மா காந்தி" என்றே அவர் போற்றிப் பாடினார்.

அந்தப் பட்டமே காந்திஜிக்கு நிலைத்து நின்று பெரும் புகழ் ஈட்டித் தந்தது.

## காந்திஜியும் உண்ணாவிரதமும்

காந்திஜி நாட்டுக்காக உபவாசம் இருந்த நாட்களையும், அவர் உணவு அருந்திய நாட்களை யும் எண்ணிப் பார்த்தால் கண்களில் நீர் கசியும். அஹிம்சையும், உண்ணாவிரதமும், காந்திஜியின் ஒப்பற்ற ஆயுதங்களாகத் திகழ்ந்தன.

பிறரிடம், எதிர்பார்க்கும் மாற்றத்தைப் பெற வும்; சில சமயம் பிறருக்காக தன்னையே தண்டித் துக் கொள்ளவும், சில சமயம் தனக்கு வேண்டிய மனோவலிமைக்காகவும் அவர் உபவாசத்தையே பெரிதும் நம்பினார்.

'தங்கத்தை தீயிலிட்டு, புடம் போடுவது போல், உண்ணாவிரதத்தினால் அவர் தமது ஆத்மாவிற்கு மேலும் மேலும் மெரு கூட்டினார். உபவாசத்தின் மூலம் உள்ளத்திற்கு புதிய பலம் ஏற்படும் என்று நம்பினார். பிறருக்கும் அவர் அதையே போதித் தார்.

இந்தியாவின் ஈடு இணையற்ற முதல் சுதந்திர தினம்; 1947-ஆகஸ்ட் 15-ம் தேதி. நாடெங்கும் சுதந்திரத் திருநாளைக் கொண்டாடி மகிழ்ச்சியில்

ஆழ்ந்திருந்த போது காந்திஜி உபவாசம் இருந்தார் அதோடு மட்டுமல்ல; தன்னோடு கூட இருந்தவர்களையும் உபவாசம் இருக்கும்படிக் கூறினார்.

அப்போது அருகில் இருந்த மனுகாந்தி, மகாத்மாவைப் பார்த்து, "பாபுஜி! இன்று சுதந்திர நன்னாள். அதை ஈட்டுத் தந்த உங்களுக்கு நாங்கள் மகிழ்ச்சியோடு இனிப்பு வழங்க வந்துள்ளோம். இன்று உபவாசம் இருக்கிறீர்களே," என்று கேட்டார்.

அதற்கு மகாத்மா, மனுகாந்தியை நோக்கி "நான் எனது பிறந்த நாள்; கலியாண நாள் ஆகிய நல்ல தினங்களில் உபவாசமே இருக்கச் சொல்வதுதான் வழக்கம். அது உனக்குத் தெரியாதது அல்லவே! இன்றுமுதல் நம்முடைய பொறுப்பு எவ்வளவு அதிகமாக இருக்கிறது! ஏகாதசி உபவாசத்தினால் மனம் கடவுள் பக்தியில் திரும்புவதைப் போல, இன்றைய உபவாசத்தினால் நமக்கு நம் பொறுப்பைப் பற்றிய உணர்ச்சியே ஏற்படும். நமக்கு சுதந்திரம் அளித்த ஆயுதம் ராட்டை, அதை நாம் இன்று எப்படி மறக்க முடியும்? இன்று இறைவனிடம் நம்முடைய பிரார்த்தனை, "சுதந்திரம் பெற்றுவிட்ட பெருமையில் கர்வம் அடைந்து விடாதபடி என்னைக் காப்பாற்று; பொறுப்பு உணர்ச்சியையும் பணிவையும் எனக்குக் கொடுப்பாய் என்று வேண்டுவதாகவே இருக்க வேண்டும்" என்று சொன்னார்.

அப்பொழுது காந்தியிடம் ஆசி பெறவந்த வங்காள மந்திரிகளை நோக்கி—“நீங்கள் இன்று முதல் மகுடத்தை அணியப் போகிறீர்கள். இன்று வரை எப்படி எளிய வாழ்க்கை நடத்தி வந்தீர்களோ அப்படியே இனியும் நடத்தி வாருங்கள். அதிகாரமும் பதவியும் உங்களை ஏமாற்றிவிடக் கூடாது. மக்களின் முன் பணிவு, எளிமை, அகிம்சை, சகிப்புத் தன்மை ஆகிய நல்ல பண்புகளுக்கு மேற்கோளாக நீங்கள் வாழ வேண்டும்.

கிராமங்களையும், ஏழை எளியோரையும் நீங்கள் கைதூக்கி விடவேண்டும்; ஆங்கிலேயரின் ஆட்சியில் பரிட்சை எதற்குமே இடமில்லை. ஆனால், இன்று முதலோ நமக்கு எல்லாத் துறைகளிலும் பரீட்சைகள் தாம். அவற்றில் தேற கடவுள் உங்களுக்கு சக்தியைக் கொடுக்கட்டும்”

என்று கூறி ஆசி வழங்கினார்.

பிறகு அனைவரும் அந்த சுதந்திர நாளில் காந்தியுடன் உபவாசம் இருந்து நூல் நூற்றனர்.

**காந்திஜியைக் கவர்ந்தவர்கள்**

உலகம் முழுவதும் இணையற்ற நாவலாசிரியராக அறியப்பட்ட ரஷ்ய அறிஞர் டால்ஸ்டாயை மகாத்மாகாந்தி குருவாக உவந்து ஏற்றுக் கொண்டார்.

டால்ஸ்டாயை—ஓர் ஆன்மிகச் செல்வராக; நன்னெறி வாழ்க்கையை கடைபிடிக்கவும், சகல துன்பங்களையும் தூசிபோல உதறித் தள்ளவும்.

மிகுந்த தன்னக்பிக்கையோடு முன்னேறிச் செல்ல உதவும், சிறந்த வழிகாட்டியாகவும்; காந்திஜி கண்டார்.

**'கர்த்தரின் சாம்ராஜ்யம் நமக்குள் இருக்கிறது'** என்ற டால்ஸ்டாயின் கருத்துக்கள் காந்திக்கு மிகவும் அளவற்ற நம்பிக்கையையும் உத்வேகத்தையும் அளித்தன. டால்ஸ்டாயின் நூல்களின் பட்டியல் ஒன்றை, 'படிக்க வேண்டியவை', என்று மகாத்மா சிபாரிசு செய்தார். அதில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய நூல் **"இனி நாம் செய்ய வேண்டியது யாது?"** என்பதாகும்.

ஏழைமை—அறியாமை—வறுமை இவைகளின் பிடியில் சிக்கித் தவித்த மக்களைப் பற்றி அளவற்ற வாஞ்சையுடனும் அடக்கத்தோடும் கலாபூர்வமாக நாவல்கள் எழுதிய சரத் சந்திர சாட்டர்ஜியை காந்திஜி மதிப்போடு ஏற்றுக் கொண்டார்.

இந்திய மக்களைப் பற்றி அறிந்து கொள்ள சரத் நாவல்களை மாணவர்களுக்கு காந்திஜி சிபாரிசு செய்தார் என்பது மிகவும் குறிப்பிட வேண்டிய அம்ச...

ஃ ஃ ஃ

மகாத்மாவுக்கு உத்வேகம் அளித்த இன்னொரு நபர் ரஸ்கின்! முற்றிலும் எதிர்பாராத விதமாகத் தனக்குப் படிக்கக் கிடைத்த **'கடையனுக்கும் கதி மோட்சம்'** என்ற நூல தனக்கு விளைவித்த

மாறுதலைப் பற்றி மிகுந்த பெருமிதத்துடன் மகாத்மா பின் வருமாறு எழுதினார்;

"ரஸ்கின் நூல்களில் நான் படித்த முதல் நூல் இதுவே. என் வாழ்க்கையில் உடனே மாறுதலை உண்டாக்கிய நூல் கடையனுக்கும் கதிமோட்சம் அதைப் பின்னால் குஜராத்தி மொழியில் மொழி பெயர்த்தேன். ரஸ்கினின் இம்மகத்தான நூலில், என் உள்ளத்தில் உறுதிப்பட்டிருந்ததை கொள்கை பிரதிபலித்திருப்பதைக் கண்டு கொண்டு விட்ட தாகவே கருதுகிறேன். அதனால்தான் அந்நூல் என்னை ஆட்கொணடதோடு; என் வாழ்க்கையை யும் மாற்றிக் கொள்ளும்படி செய்தது. மனித உள்ளத்தில் இருக்கும் நல்ல தன்மைகளை எழுப்பி விட வல்லவனே கவி" இந்நல்ல கருத்தையும் காந்தியும் கொண்டிருந்தார்.

ஃ ஃ ஃ

### பாரதி கண்ட பாபுஜி

காந்திஜி, ஹிந்தி, ஆங்கிலம், தமிழ், மலையாளம், பஞ்சாபி [illegible]த்தி என்று பல மொழி[illegible]லும் தன் கையொப்பமிட வல்லவர்.

எம்மதமும் சம்மதம் என்கிற பரந்த நோக்கில் அனைத்து மத மக்களிடமும் ஒரேமாதிரி அவர் அன்புகாட்டியதுபோல்—"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற வாக்கிற்கிணங்க எல்லைகளால் இந்திய மக்கள் ஒற்றுமை குலையாமலிருக்க

வேண்டுமென்று முழு மூச்சாகப் பாடுபட்டார். "இந்தியா என்பது நமது வீடு—அதில் வாழும் நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இந்தியர்" என்பதை மக்களுக்கு இடைவிடாமல் போதித்த உத்தமர்.

காந்திஜியின் நேரான அணுகலும், ஒளிவு மறைவற்ற பேச்சும் அரசியல் ரீதியில் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தின இது—

அரசியல் விவகாரங்களில் மிகவும் தேர்ந்தவர்களை எல்லாம் கூடச் செயலற்றுப் போகும்படிச் செய்தன.

மனித குலத்தின் மகிழ்ச்சிக்காகத் தன்னை முற்றும் அர்ப்பணித்துக் கொண்ட காந்தியைக் கண்டுகொண்டவர்களில் பாரதியாரும் ஒருவர்.

அரசியல் நடவடிக்கைகளில் திலகரின் வழியைச் சரியென எண்ணிச் செயல்பட்டு கொண்டு வந்த பாரதியார் அகவுணர்வால் காந்திஜியின் மகத்துவத்தைக் கண்டுகொண்ட மாத்திரத்திலேயே பாரதியார் உணர்ச்சிவயப்பட்டு—

"வாழ்கநீ! எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்

பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!
அடிமை வாழ்வகன்றிந் நாட்டார்,
விடுதலை யார்ந்து செல்வம்.
குடிமையி லுயர்வு, கல்வி
ஞானமும் கூடியோ ங்கிப்
படிமிசைத் தலைமை எய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்;
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்!
புவிக்குள்ளே முதன்மை யுற்றாய்!

என்று பாடினார்.

## காந்திஜியின் அன்றாட வாழ்க்கை

'காலம் கண்போன்றது; நேரம் பொன்னானது', என்பதை முற்றிலும் அறிந்து கடைப் பிடித்தவர் காந்திஜி. அவர் தனது அன்றாட வாழ்க்கையை எப்படி நடத்தினார் என்பதை நாம் அறிந்து கொள்வது நல்லது.

அதிகாலை 3 மணிக்கு அவர் துயிலெழுவார். கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்தபடியே "ஹேராம்" என்று சொல்லித் துளசிமணி மாலையை உருட்டி ஜபம் செய்வார். கொட்டாங்கச்சிகருக்கி, உப்புக் கலந்த கரிப்பொடியில், வேப்பங்குச்சியைத்தோய்த் துப் பல் விளக்குவார். அந்தக் குச்சியை இரண்டா

கப் பிளந்து நாக்கை வழித்து வாயைக் கொப்பளிப் பார். கொதிக்கும் 16 அவுன்ஸ் வெந்நீரில் தேனும் சோடா உப்பும் கலந்து மிகச் சுவையுடன் பருகு வார்.

சரியாக 4 மணிக்கு காலை பிரார்த்தனை. 4-20க்கும் பிரார்த்தனை முடியும்.

முதல்நாள் வந்த கடிதத்திற்கு 4-30 முதல் 5-30 மணிவரையில் தம் கையினாலேயே கடிதம் எழுதுவார்.

காலை 6 மணிக்கு உலவச் செல்லுதல். முன் தினம் மாலைக்கு மேல் அவரைக் காண வந்தவர் களுக்கு உலவும்போதுதான் பேட்டி, திரும்பி வரும் போது ஆசிரமத்திலுள்ள நோயாளிகள் ஒவ்வொரு வரையும் சந்தித்து க்ஷேமநலம் விசாரிப்பார்.

பேரிச்சம்பழத்தை ஆட்டுப் பாலில் ஊற வைத்துச் சாப்பிடுவதுதான் அவருடைய காலை ஆகாரம்.

7-30 மணி முதல் 8 மணி வரை உடலில் எண்ணெய் தேய்த்து அவருக்கு உடம்பு பிடித்து விடுவதுண்டு. பின்னர் தண்ணீர்த் தொட்டியில் குளியல். அப்போது தான் அவருடைய சீடர்கள் அவருக்கு க்ஷவரம் செய்வது வழக்கம். மீசையை மட்டும் தாமே கத்தரித்துக் கொள்வார். முகக் கண்ணாடி பார்க்கும் வழக்கமே இல்லை. குளிக்கும் போதே சிறு துயில் கொள்வது உண்டு.

10 முதல் 1 மணி வரை அறிக்கை தயார் செய்தல், கடிதம் எழுதுதல் முதலியன.

1-30 மணிக்கு பகல் உணவு, வெந்த கீரை, காய்கள், பழங்கள், ஆட்டுப்பால், வேர்க்கடலை இவைதான். அதன் பின் 2-30 மணிவரை ஓய்வு.

3 மணி வரை ராட்டையில் நூற்றுக் கொண்டே தம்மைக் காண வந்தவர்களுக்குப் பேட்டி அளிப்பார். பேட்டிகளுக்குக் கொடுக்கப் பட்ட நேரத்தை மிகக் கவனத்துடன் அநுசரிப் பார். ஒரு நிமிஷம் முன் பின் போகாது.

மாலை உணவை 5 மணிக்கே முடித்துக் கொள்வார். அஸ்தமித்த பிறகு எதுவும் சாப்பிடுவ தில்லை. 6 மணி வரை சிறிது தூரம் உலாவி விட்டு வருவார்.

6 மணிக்கு மாலைப் பிரார்த்தனை. காலைப் பிரார்த்தனை ஆசிரமத்திலுள்ளவர்களுக்கு மட்டும்தான். மாலைப் பிரார்த்தனையில் பொது மக்கள் கலந்து கொள்ளலாம்.

7 மணி முதல் 8 மணி வரை முக்கிய அலுவல் கள் மட்டும் கவனிக்கப்படும். தூங்கப் போகும் முன் ஆசிரமத்து ஏற்பாடுகள், கணக்குகள் பற்றி விசாரிப்பார். ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்குக் கேட்பார். கடைசியாகத் துளசி மணி மாலையை உருட்டிக் கொண்டே ராமஜெபம் செய்து தூங்கி விடுவார்.

காந்திஜி தம் வாழ்நாளில் ஒரு நாள் கூட; ஒரு நிமிஷங்கூட வீணாகச் செலவழித்ததில்லை. நாம் ஒரு நாளில் எத்தனை மணி நேரம் பயன்படுத்துகிறோம்; எத்தனை மணி நேரத்தை வீணடிக்கிறோம் என்று சிந்தித்துப் பார்ப்பது நல்லது அல்லவா?

## போர் பந்தர் முதல் ராஜ்காட் வரை (காந்திஜி ஓர் கண்ணோட்டம்)

## (1869—1948)

1869 அக்டோபர் -2-ம் தேதி மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி பிறந்தார்.

1883 கஸ்தூரிபாயை மணந்து கொண்டார்.

1884 அண்ணலின் தந்தை கரம்சந்த் காந்தி காலமானார்.

1888 செப்டம்பர் 4ம் தேதி மேற்படிப்புக்காக லண்டனுக்குப் புறப்பட்டார்.

1891 ஜூன் 10ம் தேதி பாரிஸ்டர் பட்டம் பெற்றார். ஜூலை 7-ம் தேதி பம்பாய் திரும்பினார். தாயாரின் மரணச் செய்தி கேட்டுத் துடித்தார்.

1892 ராஜ்கோட், பம்பாய் ஆகிய நகரங்களில தமது வக்கீல் தொழிலைத் துவக்கினார்.

1893 ஏப்ரல் மாதம் ஒரு வழக்குக்காக தென் ஆப்பிரிக்கா சென்றார்.

1895 நேட்டால் சுப்ரீம் கோர்ட் அட்வகேட் நேட்டால் இந்திய காங்கிரஸ் உதயம்.

1896 ஆறுமாத இந்தியப் பயணம்; திலகர்' கோகலேயுடன் சந்திப்பு.

1897 டர்பன் திரும்புகையில் நிறவெறியர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்.

1899 போயர் யுத்தத்தில் ஆங்கிலேயருக்கு வைத்திய உதவி அளித்ததற்காக, பிரிட்டிஷ் அரசு தங்கப்பதக்கம் அளித்தது.

1901 இந்தியா வருகை—கல்கத்தா காங்கிரஸில் கலந்து கொள்ளல்.

1902 பர்மா யாத்திரை மூன்றாம் வகுப்பு ரெயிலில் இந்தியச் சுற்றுப் பயணம். மீண்டும் தென் ஆப்பிரிக்கா புறப்பாடு.

1903 ட்ரான்ஸ்வால் பிரிட்டிஷ் இந்தியர் அசோசியேஷன் 'இந்தியன் ஒபினியன்' பத்திரிகை துவக்கம்

1904 ரஸ்கினியின் 'கடையனுக்கும் கடைத் தேற்றம்' படித்து வாழ்வில் புரட்சிகரமான மாறுதல்; ஃபோனிக்ஸ் ஆச்ரமம்.

1906 தென்னாப்பிரிக்காவில் நடந்த "ஜுலு கலகத்தில் காய முற்றோருக்கு வைத்திய

உதவி செய்ததற்காக பிரிட்டிஷ் அரசு தங்கப்பதக்கம் வழங்கியது. பிரம்மச்சரிய விரதம் மேற்கொள்ளலை கையாண்டதுடன், புதிதாக சத்தியாக்கிரகம் என்ற சொல்லை ஆக்கம் செய்தார்.

1907 இந்தியரைப் பாகுபடுத்தும் கறுப்புச் சட்டத்துக்கு எதிராக சத்தியாக்கிரகம்

1908-இல் கைது.

1909 டால்ஸ்டாய்க்கு முதல் கடிதம். இங்கிலாந்திலிருந்து திடும்புகையில் 'இத்திய சுயராஜ்யம்' நூல் இயற்றல்.

1910 ஜோகன்ஸ்பர்க்கில் டால்ஸ்டாய் பண்ணை.

1912 கோகலேயின் தென் ஆட்பிரிக்க விஜயம் "ஆரோக்கியத் திறவு கோல்" புத்தகம் எழுதுதல்.

1913 மீண்டும் சத்தியாக்கிரகம், கைது சிறையில் 7 நாள் உபவாசம் 4½ மாதம் ஒரே வேளை உணவு.

1914 பதினான்கு நாள் உபவாசம், சத்தியாக்கிரகம் வெற்றி. இங்கிலாந்து சென்று முதல் உலக மகா யுத்தத்தில் வைத்திய உதவிப் படை அமைத்து தொண்டு செய்தார். இதற்காக பிரிட்டிஷ் அரசு காந்திஜிக்கு 'கெய்சர்-இ-ஹிந்த்' என்ற பெயர் கொண்ட தங்கப் பதக்கம் அளித்தது.

1915 "கெய்சர்-இ-ஹிந்த்", மெடல் பெற்றார். இந்தியா வருகை. பிப்ரவரி 19-இல் கோகலே யின் மரணம். மே 25-இல் ஆச்ரமம் அமைப்பு.

1916 காசி பல்கலைக் கழகத்தில் சொற்பொழிவு லக்நௌ காங்கிரசில் நேருவுடன் சந்திப்பு.

1917 ராஜன் பாபுவுடன் சந்திப்பு. ஏப்ரல் 19-இல் சம்பாரன் சத்தியாக்கிரகம்.

1918 ஆமதாபாத் மில் தொழிலாளர் போராட் டம். 3 நாள் உபவாசம். கேடா சத்தியாக் கிரகம். சர்க்காவுக்கு மறுவாழ்வு.

1919 ரௌலட் சட்டம். ஏப்ரல் 6-இல் உபவாசம் ஏப்ரல் 13-இல் ஜாலியன் வாலாபாக் படு கொலை, "யங் இந்தியா, நவஜீவன்" பத்திரி கைகள் துவக்கம். கிலாபத் கிளர்ச்சி. அமிரு தசரஸ் காங்கிரஸ்.

1920 திலகரின் மரணம், திலகர் சுயராஜ்ய நிதி திரட்டல். ஒத்துழையாமை இயக்கம் ஆரம் பம், குஜராத் வித்யாபீடம் துவக்கம்.

1921 வேல்ஸ் இளவரசர் வருகை; பகிஷ்கரிப்பும் தடியடிக் குழப்பமும். 5 நாள் உபவாசம். ஆமதாபாத் காங்கிரஸ்.

1922 பிப்ரவரி 4-இல் சௌரி சௌரா வன்முறை கள். சத்தியாக்கிரக நிறுத்தம். 5 நாள் உப

வாசம். மார்ச் 10-இல் கைது. 6 வருஷ தண்டனை கிடைத்தது.

1924 குடற் புண்ணுக்காக வயிற்று அறுவைச் சிகிச்சை. மார்ச் 4-இல் விடுதலை. செப்டம்பர் 24-இல் இந்து—முஸ்லிம் ஒற்றுமைக்காக 21 நாள் உபவாசம்.

1925 ஜூன் 6-இல் சி. ஆர். தாஸின் மரணம். 7 நாள் உபவாசம். சர்க்கா சங்க ஸ்தாபனம்.

1928 சைமன் கமிஷன் வருகை. பர்டோலி சத்தியாக்கிரகம். லாலா லஜபதிராயின் மரணம்.

1929 லாகூர் காங்கிரசில் பூரண சுயராஜ்யக் கோரிக்கை,

1930 ஜனவரி 26-இல் பூரண சுயராஜ்யப் பிரதிக்ஞை. மார்ச் 12-இல் தண்டி யாத்திரை ஏப்ரல்-6-ல் உப்பு சத்தியாக்கிரகம். கடலில் உப்பு காய்ச்சி சட்டத்தை எதிர்த்தார். மே-5இல் கைதானார்.

1931 ஜனவரி 25-இல் விடுதலை, மார்ச் 4-இல் காந்தி இர்வின் உடன்படிக்கை. இங்கிலாந்தில் இரண்டாவது வட்ட மேஜை மகாநாடு வெறுங்கையோடு திரும்பி வருதல்.

1932 காங்கிரசுக்குத் தடை. மீண்டும் சத்தியாக்கிரகம். ஜனவரி 4-இல் கைது. "நவஜீவன்"

யங் இந்தியா நிறுத்தம். செப்டம்பர் 20-இல் கைது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முடிவை எதிர்த்துச் சாகும்வரை உண்ணா விரதம். எரவாடா ஒப்பந்தம். செப்டம்பர் 26-இல் உண்ணாவிரதம் முடிதல்.

1933 மே 8-இலிருந்து 21 நாள் உபவாசம் 'ஹரிஜன்' பத்திரிகையை துவக்கினார். விடுதலையாகி மீண்டும் கைது. ஒரு வருடத் தண்டனை. ஆகஸ்ட் 16-இலிருந்து 7 நாள் உண்ணாவிரதம். ஆகஸ்ட் 23-இல் விடுதலை சபர்மதி ஆச்ரமத்தைத் துறந்து வார்தா வில் வசிக்க முடிவு செய்தார். நவம்பர் 7 முதல் ஹரிஜன முன்னேற்ற யாத்திரையை மேற்கொண்டார்.

1934 பீகார் பூகம்பம். மே 7-இல் சத்தியாக்கிரக நிறுத்தம். 7 நாள் உபவாசம்.

1935 காங்கிரஸ் பொன் விழா.

1936 சேவாக்கிராம ஆச்ரமம் தோற்றம்.

1937 ஜூலையில் காங்கிரஸ் மந்திரி சபைகள் பதவியேற்பு. ஆதாரக் கல்வியின் ஆரம்பம்.

1939 ராஜ்கோட்டில் உண்ணவிரதம். வைஸ்ராய் தலையீட்டின் பேரில் 4 நாளில் நிறுத்தம். செப்டம்பர் 3-இல் இரண்டாவது உலகப் போர் காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜிநாமா.

1940 தனிநபர் சத்தியாகிரகம். வினோபா பாவே முதல்சத்தியாக்கிரகி. 'ஹரிஜன்' பத்திரிகைக் குத் தடை.

1942 ஆகஸ்ட் 8-ஆம் தேதிஇரவு 'வெள்ளையனே வெளியேறு!' தீர்மானம். ஆகஸ்ட் 9-இல் நாடெங்கும் தலைவர்கள் கைது ஆகஸ்ட் 15-இல் செயலாளர் மகாதேவ தேசாயின் மரணம்.

1943 ஆகாகான் மாளிகைச் சிறையில் 21-நாள் உபவாசம்.

1944 பிப்ரவரி 22-இல் கஸ்தூரிபாவின் மரணம். மே 6-இல் சிறையிலிருந்து விடுதலை. செப்டம்பர், காந்தி-ஜின்னா பேச்சு வார்த்தைகள்.

1945 தலைவர்கள் விடுதலை. முதல் சிம்லா மகா நாடு.

1946 கிரிப்ஸ் (காபினெட்) தூது கோஷ்டி. ஆகஸ்ட் 16-ல் முஸ்லிம் லீக் நேரடி நடவடிக்கை தினம். வகுப்புக் கலவரங்கள். நவகாளி யாத்திரை.

1947 ஆகஸ்ட் 15-இல் தேச விடுதலை. கல்கத்தா வில் 73 மணி நேர உபவாசம்.

1948 டில்லியில் வகுப்பு ஒற்றுமைக்காகச் சாகும் வரை உண்ணாவிரதம் ஐந்து நாட்கள் கழித்து நிறுத்தம். ஜனவரி 30-இல் பிரார்த்தனைக்குச் செல்லும் வழியில் கோட்ஸே என்னும் கொடியவனால் சுடப் பட்டு அமரரானார்.

# ஆப்ரகாம் லிங்கன்

## (1808 — 1865)

**''அடிமை வியாபாரம் தவறில்லை என்றால்; இந்த உலகில் செய்யப்படும் எந்தக் கொடிய செயலுமே தவறில்லையாகும்.''**

**—ஆப்ரகாம் லிங்கன்**

ஒரு மனிதன் எக்குடியில் பிறந்தான்; அவன் எந்தச் சூழ்நிலையில் வளர்ந்தான் என்பனவெல்லாம் ஒன்றும் முக்கிய மானதல்ல. எக்குடிப் பிறப்பினும்; எத்தகைய வறுமைச் சூழலில் வளர்ந்தாலும்; ஒருவனுக்கு விடாமுயற்சியும்; உயர்ந்த லட்சியங்களும் இருந்தால் அவன் ஒரு நாள் உலகில் உயர் நிலையை அடைவான்; பெரும் புகழ் பெற்று மக்களால் போற்றப்படுவான் என்பதற்கு ஏழ்குடியில் பிறந்த ஆப்ரகாம் லிங்கனின் வாழ்க்கை ஓர் சிறந்த எடுத்துக்காட்டு.

வட அமெரிக்காவில் 'கென்டக்கி' என்று ஒரு மாநிலம். அதைச் சார்ந்த 'ஹாட் ஜென்வில்' என்னும் ஊரின் அருகேயுள்ள ஒரு காட்டுப் பிரதேசத்

தில் 1808-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ம் தேதி, ஒரு மரக்குடிசை வீட்டில் ஆப்ரகாம் லிங்கன் பிறந்தார், தந்தையின் பெயர் தாமஸ் லிங்கன். தாயாரின் பெயர் நான்ஸி அம்மையார். இத்தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாக லிங்கன் பிறந்தார்.

ஆப்ரகாம் லிங்கனின் மூத்த சகோதரியின் பெயர் சாரா. இருவரும் பெற்றோருடன் "வெர்ஜீன்யா" விலிருந்து கென் டக்கி என்னும் ஊருக்கு வந்தனர். அவர் தந்தை தச்சுத் தொழிலையும் விவசாயத்தையும் செய்து வந்தார். பிறகு தச்சுத் தொழிலை நிறுத்தி விட்டு முழுக்க முழுக்க விவசாயத்திலேயே கவனம் செலுத்தினார்.

1816 -ம் ஆண்டு லிங்கனது 7 வயதில் பக்கத்து நிலத்தகராறு காரணமாக லிங்கனின் தந்தை குடும்பத்துடன் அந்த இடத்தை விட்டு ஜென்ரி வில்லியின் அருகிலுள்ள இந்தியானா என்னும் இடத்தில் வந்து வசித்தார்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அந்த வட்டாரத்தில் பரவிய ஒரு தொற்று நோயினால் லிங்கனது தாயார் இறந்து போனார். லிங்கன் தாயாரிடம் அளவு கடந்த அன்பு கொண்டிருந்தார். இதனால், தாயின் மரணம் அவர் மனதைப் பெரிதும் பாதித்தது. தன் வாழ்நாளில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும். தன் தாயாரின் பாதிப்பு இருந்ததாக அவர் நம்பினார்.

மனைவி இறந்த அடுத்த ஆண்டிற்குள் லிங்கனின் தந்தை, எலிஸபெத் டவுனுக்கு ஒரு வேலையாகச் சென்றிருந்தார். அப்போது அங்கே மூன்று குழந்தைகளுடைய ஒரு விதவைப் பெண்ணை, லிங்கனின் தந்தை இரண்டாந் தாரமாக மணந்து கொண்டு தன் சொந்த ஊரான இந்தியானாவுக்குத் திரும்பினார்.

தனியாக ஊருக்குச் சென்ற தந்தை ஒரு புதிய அம்மாவுடனும், மூன்று குழந்தைகளுடனும் வந்துள்ளதை கண்டு லிங்கன் வியப்புடன் நோக்கினார். ஆனால் லிங்கனின் சிற்றன்னையாக வந்தவள் தன் குழந்தைகளைப் போலவே, லிங்கனையும், அவர் சகோதரி சாராவையும் மிகுந்த அன்புடன் நேசித்து வளர்த்தாள்.

லிங்கனது இதயத்தில் கல்வித்தாகம் வற்றாத ஊற்றாகப் பெருக்கெடுத்தோடியது. குடும்பச் சூழ்நிலை காரணமாக நிலையான இடத்திலிருந்து ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை என்றாலும், கல்விக்காக அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஏராளம். யாரிடமாவது புத்தகங்கள் இருக்கிறது என்று தெரிந்தால் போதும் அதற்காகப் பல மைல்கள் நடப்பதையும் பொருட்படுத்தாமல் சென்று வாங்கிப் படிப்பார்.

புத்தகங்களின் எண்ணிக்கை அதிகமில்லை என்றாலும் அந்த நூல்களில் உள்ள விஷயங்களை ஆழமாகப் புரிந்து கொண்டு படித்தார். பல ஊர்

கள்; பல பள்ளிகள் என மாறிக் கொண்டே வந்த தில் லிங்கனுடைய மொத்த பள்ளிக் கல்வி நாட்கள் சுமார் ஒரு ஆண்டுகள் தான் இருக்கும்.

ஆயினும் அவர் தமது பொது அறிவைக் கொண்டு பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். பகலெல்லாம் பண்ணையில் கடுமையாக வேலை செய்வார். இரவில் வெகு நேரம் கண் விழித்துப் படிப்பார். "என் வீட்டைச் சுற்றி ஐம்பது மைல் சுற்று வட்டாரத்திற்குள் நான் படிக்காத புத்தகங் களே கிடையாது" என்று லிங்கன் கூறியுள்ளார். எப்படியும் தான் ஒரு சிறந்த கல்விமானாகி விட வேண்டும் என்கிற முயற்சியை அவர் ஒரு போதும் நிறுத்திவிடவில்லை.

தந்தையிடம் விடை பெற்றுக் கொண்டு லிங்கன் வீட்டை விட்டு வெளியே வந்து விட்டார். எங்கு போவது? என்ன செய்வது என்று புரியாத நிலை. நீண்ட தூரம் நீண்ட நாட்கள் நடந்து சென்று கொண்டே இருந்த லிங்கன் நிரூசலாம என்ற இடத்தை அடைந்தார்.

அங்கு ஆபெட் என்பவரின் பல சரக்குக் கடை யில் முதன் முதலாக வேலைக்குச் சேர்ந்தார். கடை வியாபாரத்தைப் பற்றி ஏதுமறியாத லிங்கனை சில மாதங்களுக்கெல்லாம் ஆபெட் வேலையை விட்டு நிறுத்தி விட்டார்.

வேலையிழந்த லிங்கன் வட அமெரிக்காவி லுள்ள இல்லினாய்ஸ் என்ற நாட்டுக்குச் சென்

றார். அங்கு பல்வேறு தொழில் செய்தார். எங்கும் எதிலும் மனம் நிலைத்து நிற்கவில்லை. செய்வதறியாது திகைத்தார்.

இந்த நிலையில் ஒரு வழக்கறிஞரிடம் அவர் வேலைக்குச் சேர்ந்தார்.

இந்த வாய்ப்பை லிங்கன் தனது மாபெரும் அதிர்ஷ்டமாக நம்பினார். வக்கீல் தொழில் லிங்கனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அந்த வழக்கறிஞர் மிக்க நல்லவராக இருந்தார். லிங்கனை தனது ஜீனியர்களில் ஒருவராக நினைத்து, மதித்து அன்பு செலுத்தினார்.

இந்த இடைக் காலத்தில் லிங்கனே தனது ஊதியத்தில் நிறையச் சட்ட புத்தகங்கள் வாங்கிம் படித்து தம் அறிவை விருத்தி செய்து கொண்டு சட்டக் கல்வியில் தேறினார்.

ஸ்பிரிஸ் பீல்டு என்னும் இடத்தில் தாம் ஒரு வழக்கறிஞராகத் தொழில் புரிந்தார். இங்கு அவருக்கு ஜான்ஸ் ரூவர்ட் என்னும் வழக்கறிஞர் ஒருவர் நண்பரானார். வேறு சிலரும் நண்பர்களாயினர்.

நண்பர்களின் உதவியால் லிங்கனுக்கு வசதியான உணவு, உடை, உறைவிடம் எல்லாம் அமைந்தன.

ஆப்ரகாம் லிங்கன் சிறந்த முறையில் வக்கீல் தொழிலை நடத்தி வந்தார். பணம் அவருக்கு ஒரு

அத்தியாவசியமாகத் தேவையான ஒரு பொருள் என்றாலும்; பணத்திற்காக அவர் என்றும், தன் மனச்சாட்சியின் உத்தரவினின்றும் விலகிச் சென்ற தில்லை.

நீதி, நேர்மை, இவற்றுக்காக மட்டுமே வழக் காடி வந்தார். பொய்யான வழக்குகளின் மீது வாதாட எவ்வளவு பொருள் கொடுத்தாலும் லிங்கன் அதை ஒரு போதும் ஒப்புக் கொண்ட தில்லை. நியாயமான வழக்காக இருந்தால், பண மில்லாத ஏழைக்காகவும் அவர் வாதாடுவார்,

லிங்கனுக்கு நண்பர்கள் அதிகமானார்கள் 1843-ம் ஆண்டு தன் நண்பரான வில்லியம் ஹெர்டன் என்னும் வழக்கறிஞரோடு கூட்டுச் சேர்ந்து வக்கீல் தொழிலை அபிவிருத்தி செய்து கொண்டார்.

தமது வழக்கை தெளிவாக எடுத்துரைக்க இவர் நீதிபதிமுன் அழகான கதைகள் சொல்வது வழக்கம்.

இவர் கூறும் கதைகள் வழக்கை விளக்க உதவு வதோடு மட்டுமின்றி; கேட்பதற்கு மிகவும் மகிழ்ச் சியும், சிரிப்பும் ஊட்டுவதாக இருக்கும்.

லிங்கன் வழக்கு மன்றத்திற்கு வருகிறார் என் றால், சகல வக்கீல்களுக்கும், பார்வையாளர்களுக் கும், நீதிபதிக்குமே கூட மகிழ்ச்சியாக இருக்கும்.

இதனால் இல்லினாய்ஸ் நகரம் முழுவதும் வழக்கறிஞர் லிங்கனைப் பற்றிப் பெருமையாகப் பேசப்பட்டது.

பேரும் புகழும் லிங்கனைத் தேடி வந்த துவக்கியதால், நீதிபதி பதவி அவரை நாடி வந்தது.

நீதிக்கும், நேர்மைக்கும், அன்பிற்கும், இரக்கத்திற்கும் கடின உழைப்பிற்கும் பெயர் போன ஆப்ரகாம்லிங்கனைப் பற்றி இல்லினாய்ஸ் நாட்டு மக்கள் நன்கு அறிந்து கொண்டிருந்தனர்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் பொது மன்றமாகிய காங்கிரஸ் மகாசபையில் அங்கம் வகித்த ஆப்ரகாம்லிங்கன் மிகுந்த தகுதி வாய்ந்தவர் என்று மக்கள் எண்ணினர்.

அதன்படி 1816-ம் ஆண்டில் காங்கிரஸ் மகா சபைக்கு பிரதிநிதியாக லிங்கனைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தனர்.

அந்த காங்கிரஸ், மகாசபையில் ஒருவருக்கொருவர் கருத்து வேற்றுமைகள் கொள்ளத் துவங்கினர். இதன் விளைவாக ஒன்றாயிருந்த காங்கிரஸ் கட்சி வடநாட்டு கட்சி என்றும்; தென்னாட்டு கட்சி என்றும் இரு பிரிவுகளாகப் பிளவுபட்டன.

ஆனால்—

பின்னாளில் இந்த வடக்கு, தெற்கு ஆகிய இரு கட்சிகளையும், இரு நாட்டையும் ஒன்றாக இணைத்து, ஒரே ஐக்கிய அமெரிக்காவாக உரு

வாக்கிய பெருமை, ஆப்ரகாம்லிங்கனையே சாரும்.

**மனிதனும் அடிமைகளும்**

இப்போதைய ஐக்கிய அமெரிக்கா அன்று பதின்மூன்று சிறுநாடுகளைக் கொண்ட, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா என்று இரு பிரிவுகளைக் கொண்டதாக இருந்தது.

வடக்குப் பகுதி அதிகமாக உழவுத் தொழிலிலும், கடலில் மீன் பிடித்தல், பொருள்களை உற்பத்தி செய்து விற்றல் ஆகியவற்றிலே ஈடுபட்டிருந்தது.

தெற்குப் பகுதி—பண்ணைகள் நிறைந்ததாக, பருத்தியும், புகையிலையும், ஏராளமாகப் பயிரிட்டு சாகுபடி செய்து வந்தன.

இந்தப் பண்ணைகளின் அமெரிக்க முதலாளிகள் சொகுசான வாழ்க்கை நடத்துபவர்கள். பண்ணை வேலைக்கும், பயிர்த் தொழிலுக்கும், இன்னும் கடினமான வேறு பல வேலைகளுக்கும் தங்களது நீக்ரோ அடிமைகளையே பயன்படுத்தி வந்தனர்.

இந்த அமெரிக்க முதலாளிகளுக்கு அடிமை நீக்ரோக்களை அறிமுகப்படுத்தியவர்கள் ஆங்கிலேயர்கள்.

ஆப்பிரிக்காவிலிருந்து பழங்குடி நீக்ரோக்களை அவர்கள் கொண்டு வருவார்கள். அமெரிக்கச் சந்தையில், பண்ணை முதலாளிகளுக்கு, நீக்ரோக்-

களை ஆயுள் அடிமைகளாக குறைந்த விலைக்கு ஆங்கிலேயர்கள் விற்று வியாபாரம் செய்து பிழைத்து வந்தனர்.

கடினமான, முரட்டு வேலைகளுக்கு ஏற்ற மனிதன் என்று பண்ணை முதலாளிகள் நீக்ரோக் களை வாங்கிப் பெருக்கினர்.

இந்த அடிமைகளை பண்ணை முதலாளிகள்— ஆடு மாடுகளுக்காவது சிறிது தூரம் தன்னிச்சை யாகச் செல்லும் சுதந்திரம் உண்டு; இந்த அடிமை மனிதர்களுக்கு அந்த சுதந்திரம் கூட வழங்காமல், வாட்டி வதைத்து வேலை வாங்கினார்கள்.

வாயில்லாப் பூச்சிகளான அந்த அடிமை நீக்ரோக்கள் 'இப்படி ஏன் விற்கப்படுகிறோம்' என்கிற சிந்தனை கூட இன்றி—விலைகொடுத்து வாங்கிய பண்ணை முதலாளிகளுக்காக உயிரை விட்டு இரவு பகல் பாராமல் கடுமையாக உழைத் தனர்.

அப்படி உழைக்க மறுப்பவர்களை வெட்டி வீசினாலும் ஏன் என்று கேட்க அங்கு எவரும் இல்லை.

இந்த ஆயிரக்கணக்கான அடிமைகள் மட்டும் அமெரிக்காவுக்கு வராமற்போனால்—

அந்தத் தென்பகுதி இப்படிச் செழிப்பான பண்ணைகளினாலும், வளமான தொழிற் பெருக் கத்தாலும், ஒருபோதும் செல்வம் கொழிக்கும் நாடாகச் சிறந்து விளங்கியிருக்க முடியாது.

## அழுவதற்கு குழிவிழுந்த கண்களில் நீர் இல்லை

அரசியல்வாதியாக மாறினாலும் ஏழை எளிய மக்களின் உற்ற தோழராகவும்; கருணை உள்ளம் படைத்தவராகவும், லிங்கன் என்றுமே மாறாமல் இருந்தார்.

ஒருமுறை தென்பகுதிப் பண்ணைகளைப் பார்வையிடச் சென்ற லிங்கன், சிலைபோல் நின்று விட்டார்.

ஒரு பண்ணை முதலாளி, வரிசையாக மரத்தில் கட்டி வைத்திருந்த தனது அடிமை நீக்ரோக்களை மாறிமாறிச் சவுக்கால் அடித்துக்கொண்டிருந்தார். அவர்களது தலை துவண்டு தொங்கியது. கரிய நிற உடம்பெல்லாம் செக்கச் செவேலென்று ரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது. உடலில் சவுக்கின் தழும்பு படாத இடம் இதயம் ஒன்று தான்.

லிங்கன் இதற்கான காரணத்தை விசாரித்தார். அவர்கள் இரவில் வேலை செய்ய மறுப்பதாக பண்ணை முதலாளி பதிலளித்தார்.

"பகலில் இவர்கள் வேலை செய்யவில்லையா?" என லிங்கன் கேட்டார்.

"பகல், இரவு இருவேளை வேலைக்கும் சேர்த்துத்தான், நான் இவர்களை அதிக விலைக்கு வாங்கி இருக்கிறேன்" எனப் பண்ணை முதலாளி கூறி முடிப்பதற்குள் லிங்கன் அங்கிருந்து புறப்பட்டு விட்டார்.

அவரது குழிவிழுந்த கண்களின் அடிவாரத்தி லிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது. அதைக் கைக்குட்டையால் துடைத்துக்கொள்ள வேண்டும் என்ற நினைப்போ, உணர்வோ இன்றி காரில் ஏறி அமர்ந்து சென்று விட்டார்.

'இந்த சம்பவத்திற்குப் பிறகு லிங்கன் மன அமைதி இழந்தார். அடிமை முறையைப் பற்றி அவர் அறிந்திருந்ததை விடக், கண்டதும், கற்றுக் கொண்டதும் மிக அதிகம்.

இந்த அப்பாவி அடிமைகளுக்கு விடுதலை வாங்கிக் கொடுக்கும் வரை, என்னால் நிம்மதி யாகத் தூங்க முடியாது; அதற்காக, நான் என் முழு சக்திகளையும் பயன்படுத்திப் போராடுவேன்'' என்று மனதில் உறுதி பூண்டார்.

ஐக்கிய நாடுகளின் பொது அரசியல் மன்றத் தில் அடிமைத் தனத்தை அறவே ஒழிக்கும் தீர் மானம் ஒன்றை நிறைவேற்றிக் கொண்டுவநதார்.

''மக்கள் அனைவரும் சுதந்திரம் உடையவர்கள். நாட்டில் உள்ள மக்கள் எல்லோருக்கும் சம உரிமை உண்டு. அதனை எவரும், எக்காரணம் கொண்டும் பறிக்கக் கூடாது.

அடிமைகளை வைத்து வேலை வாங்கு வது என்பது—நாகரிகமுடைய சமுதாயத்திற்கு களங்கம் ஏற்படுத்துவதாகும்.

அடிமை வியாபாரம் தவறில்லை என்றால்; உலகில் செய்யப் படும் எந்தக் கொடிய செயலும் தவறில்லையாகும்'' என்று அழுத்தமாக வற்புறுத்திப் பேசினார்.

லிங்கன் கொண்டுவந்த தீர்மானம் அனைவரையும் சிந்திக்க வைத்தது, அதன் விளைவாக அப்போது அரசியல் மன்றத்தில் "கடவுள் முன்னிலையில் நாம் அனைவரும் சமமானவர்களே. ஒவ்வொருவருக்கும் பிறப்பு என்பது கடவுளால் கொடுக்கப்பட்டது. அவர்களுக்கு மறுக்க முடியாத சில உரிமைகள் உண்டு. வாழ்க்கை; விடுதலையுணர்வு, இன்பம் நாடுதல், ஆகியவை அவ்வுரிமைகளில் அடங்கும்"—என்று சுதந்திர அறிக்கை படிக்கப்பட்டது.

சுதந்திர அறிக்கை படிக்கப்பட்ட பிறகும் தென் பகுதியில் அடிமை முறை நீக்கப்படாமல் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தது.

இது பற்றி சர்ச்சைகளும், குழப்பங்களும் தலை தூக்கியபோது, 'அடிமை முறை பற்றி தாங்களே ஒரு முடிவுக்கு வர, கான்சாஸ் நாட்டு மக்களின் விருப்பத்திற்கே விடுவது' என்று 1854-இல் ஒரு சட்டம் இயற்றப்பட்டது.

இதனால் அமெரிக்க வட நாட்டவரும்; தென்னாட்டவரும் குடியேறிய கான்சாஸ் நாட்டு மக்களுக்குள் சண்டை ஏற்பட்டது.

இந்தச் சண்டையினால் "குடியரசுக் கட்சி" என்று ஒரு புதிய கட்சி தோன்றியது.

அந்தக் குடியரசுக் கட்சியை நாட்டு நலனைக் கருதி உருவாக்கியவரே ஆப்ரகாம்லிங்கன் தான்.

குடியரசுக் கட்சியை உருவாக்கிய லிங்கன், ஐக்கிய நாடுகளில் அடிமை முறை மேலும் நீடிக்கக் கூடாது என்று கூறினார்.

லிங்கனின் ஆதரவாளர்கள், இனியும் பொறுத்திருக்கத் தேவை இல்லை; அடிமை முறையை அறவே அகற்ற உடனே அறிக்கை விடுமாறு கூறினார்.

ஆனால் லிங்கன் தீவிரமாகச் சிந்தித்து செயல் பட்டார்.

இந்த சமயத்தில் அமெரிக்கக் குடியாட்சித் தேர்தல் வந்தது. நாட்டு மக்களின் பெரும் மதிப்பிற்குரியவராக விளங்கும் லிங்கனே மக்கள் தலைவராக வரவேண்டும் என அனைவரும் விரும்பினார்கள்.

1860-ம் ஆண்டு நவம்பர் மாதம் ஆப்ரகாம் லிங்கன் அமெரிக்க ஐக்கிய நாட்டுக் குடியரசின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அது முதல் நான்கு ஆண்டுகளுக்கு அவரது தாய் நாட்டின் வாழ்வு, தாழ்வுகள் எல்லாம் அவர் கையில் ஒப்படைக்கப்பட்டன.

இந்த சமயத்தில் மனம் மாறியிருந்த தென்னாட்டவரும்; ஆபிரகாமுக்கு ஆதரவு தந்தனர். இது ஒரு நல்ல வாய்ப்பு—இதன் மூலம் அடிமை முறையை அகற்றிவிடலாம் என்று கருதிய லிங்கன் குடியரசுப் பதவியை ஏற்றார்.

'ஒரு மனிதன திண்ணியனாக இருந்தால் மட்டும்போதும்; அவன் எண்ணியபடி ஆகமுடியும்' என்பதற்கு லிங்கன் ஒரு பசுமையான சான்றாக, விளங்குகிறார்.

## பதவியும் பொறுப்புணர்வும்

குடியரசுத் தலைமைப் பொறுப்பேற்ற லிங்கன் தமது பணிகளைச் செம்மையாகவும்; பதவி வகித்த சில மாதங்களிலேயே உள்நாட்டில் ஏற்பட்ட அடுக்கடுக்கான சிக்கல்களைச் சாமாளிக்க் வேண்டியிருந்தது.

குடியரசுக் கட்சி தேர்தலில் ஜெயித்ததை தென்னாட்டவர்கள் விரும்பவில்லை. லிங்கனால் தங்களுக்கு வாழ்வு அளிக்கும் அடிமைகள் மீட்கப் பட்டு விடலாம் என்கிற பயமும் சுயநலநோக்கமும் கொண்டவர்கள் அவர்கள் வடநாட்டின் தொடர்பையே முறித்துக் கொண்டு ஒரு குழுவை அமைத்து தனியே வாழ முற்பட்டனர்.

தென்னாட்டவரால் ஐக்கிய நாடு பிளவுபடாமல் இருக்க லிங்கன் பெருமுயற்சி மேற்கொண்டார்.

ஆயினும் அதையும் மீறி தென்னாட்டவர் பிரிந்து செல்வதற்காக போராடவும் தயாராகி விட்டனர்.

விரும்பியோ, விரும்பாமலோ தென்னாட்டவரின் சவாலை ஏற்று போரில் இறங்குவது லிங்கனுக்கு தவிர்க்க முடியாததாகி விட்டது.

வட நாட்டாருக்கும், தென்னாட்டாருக்குமிடையே 1861முதல் 1865 வரை இந்தப் போர் (நான்கு ஆண்டுகள்) நீடித்தன

நாடு பிளவு படுவதை லிங்கனால் ஒருபோதும் சகித்துக் கொள்ளக் கூடியதாக இல்லை. தென்னாட்டுப் படைகளை வெல்வதிலேயே அவரது கவனமெல்லாம் இருந்தது.

இத்தருணத்தில், முன் அறிவிப்பு இன்றி 1861-ம் ஆண்டு டிசம்பர 11-ம் தேதியன்று அமைச்சரவையைக் கூட்டி விடுதலை அறிக்கை,யை வெளியிட்டார்.

"1862-ம் ஆண்டு ஜனவரி முதல் நாளிலிருந்து அமெரிக்க வடக்கு, தெற்கு நாட்டில் உள்ள எல்லா அடிமைமக்களும் விடுதலைபெற்ற சுதந்திர மனிதர்களாகக் கருதப்படுவார்கள். கருணையோடு அடிமைகளுக்கு விடுதலையளிக்கும் முதலாளிகளுக்கு ஐக்கிய அரசாங்கம் ஓரளவு நஷ்டஈடு அளிக்கும்" என்று படித்து முடித்தார்.

லிங்கன் இந்த அறிக்கையைப் படித்து முடித்த வுடன் அவையிலிருந்தோர் அதிர்ச்சியுற்றனர்; ஆனால் அடிமை நீக்ரோக்களோ, ஆனந்தக் களிப்பில் ஆழ்ந்தனர்.

விடுதலை அடைந்த நீக்ரோக்கள் தங்களது நன்றிக் கடனாக உடனடியாக வடநாட்டு படை வீரர்களுடன் சேர்ந்து கொண்டு தங்களை இத்தனை காலம் அடக்கி ஆண்டு, கொடுமைப் படுத்திய தென்னாட்டுப படைகளுக்கு எதிராகப் போர் புரிந்தனர்.

ஆப்ரகாம் லிங்கன் ராணுவப் பயிற்சி பெற்றவ ரல்லர். ஆயினும், ச ம யோ ஜி த மா க அவர் கையாண்ட போர்த் தந்திரத்தால் திடீரென வட நாட்டின் படைபலம் பெருகி வெற்றிக்கு வழி வகுத்தது. தாக்குப் பிடிக்க முடியாத தென் னாட்டுப் படைத்தலைவர் 'லீ' 1865-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் சரணடைந்து விட்டார்.

போரில் வெற்றிக் கண்ட லிங்கன் தோல்வி கண்ட தென்னாட்டவரைப் பழி வாங்க எண்ண வில்லை. பகை உணர்ச்சி சிறிதும் இன்றி நாட்டின் இருபகுதியினரையும் ஒன்றுபடுத்தி, "எனக்கு எவர் மீதும் பகை இல்லை, சிதறாத பிளவுபடாத ஐக்கிய அமெரிக்க நாட்டையே நான் விரும்பு கிறேன். அது இன்று நிறைவேறிவிட்டது. அனை வரும் பகையையும், பழையனவற்றையும் மறந்து. போரில் காயமுற்றவர்களின் துயர் துடைப்போம்,

நாட்டுக்கு உயிர் கொடுத்த வீரர்களின் தியாகம் நமக்கு நல்லறிவு ஊட்டுவதாக இருக்கட்டும். நம் நாட்டிலும், பிற நாடுகளிலும் என்றென்றும், நிலையான அமைதியும், சமாதானமுமே நிலைத்திருக்கட்டும்" என்று பேசி முடித்தார்.

லிங்கன் கூறியபடியே தென்னாட்டவர் தங்கள் பகையை மறந்து செயல்பட்டனர்.

போர் முடிவதற்குள் ஆப்ரகாம் லிங்கன் இரண்டாம் முறையாகவும் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

போர் நிலையாக நிறுத்தப்பட்டு; போர் மேகங்கள் கலைந்து சென்று ஐந்து நாட்கள் தான் ஆகியிருந்தன.

வடக்கு, தெற்கு ஆகிய இரு நாட்டாருக்கும் இடையே ஓர் சுமுகமான உடன்படிக்கை ஏற்படுவதற்குள் யாரும் கனவுகூட கண்டிராத ஒரு கொடிய செயல் நிகழ்ந்துவிட்டது.

1865-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம் நாளன்று இரவு லிங்கன் தமது மனைவியுடன் ஒரு நாடகத்திற்குச் சென்றிருந்தார்.

அவருக்கென்று பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடத்தில் அமர்ந்து நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது திடீரென்று அவரது

தலையில் இரண்டு துப்பாக்கி குண்டுகள் பாய்ந் தன. ஆப்ரகாம் அப்படியே கீழே ரத்த வெள்ளத் தில் சாய்ந்தார்.

தென்னாட்டைச் சேர்ந்தே "ஜான்வில்கீங் பூத்" என்ற வெறி பிடித்த நடிகன் இக்கொடிய செயலை செய்துவிட்டு, "தென்னாடு பழிவாங்கி விட்டது" என்று கூறிக்கொண்டே மேடைமீது தாவி ஓடினான்.

மறுநாள் காலைக், கதிரவன் தன் பொன் னொளியைப் பரப்பிக்கொண்டு எழுந்தபோது.

ஆப்ரகாம் லிங்கன் என்னும் அமெரிக்கப் பேரொளி மறைந்துவிட்டது.

அடிமைகளுக்கு விடுதலையளித்த வீரன் ஐக்கியநாட்டின் ஒற்றுமைக்கு அடிகோலிய ஆப்ரகாம்—

மக்கள் நலனும், அவர்கள் முன்னேற்றமும், நல் வாழ்வுமே தன் லட்சியமென வாழ்ந்து வந்த லிங்கன்—

கொடியவனின் குண்டை மண்டையில் பரிசாகச் சுமந்து இம் மண்ணுலகைவிட்டு மறைந் தார்.

# ஜான் எஃப் கென்னடி
# (1917—1963)

**''நாடு நமக்கு என்ன செய்தது என்று எண்ணிப் பாப்பதைவிட 'நாட்டிற்காக நாம் என்ன செய்தோம்' என்று எண்ணிப் பார்ப்பதே சிறப்பாகும்.''**

**—ஜான் கென்னடி**

ஜான் பிட்ஸ் ஜெரால்ட் கென்னடி அமெரிக்காவின் புகழ் ஜனாதிபதிகளுள் ஒருவர். 35-வது ஜனாதிபதியாக அவர் பதவி வகித்தபோது அவரது காந்தக் கவர்ச்சியால் உலகம் முழுமையுமே அவர்பால் ஈர்க்கப்பட்டது.

தமது 46-வது வயதில் கொடியவன் ஒருவன் குண்டுக்கு அவர் இரையாகிப் போனபோது உலகம் முழுதும் திரண்டு கண்ணீர் சிந்தியது.

மூன்றே ஆண்டுகள் பதவி வகித்தாலும், பதவியை மீறி உலக மக்களிடம் அவர் காட்டிய மனிதாபிமானத்திற்காகவும் மனித சமூகத்தின் மேன்மையில் அவர் வைத்திருந்த அசைக்கமுடியாத

நம்பிக்கைக்காகவும் இன்றும் அவர் உலக மக்களால் நினைவு கூறப்படுகிறார்.

அமெரிக்க நாட்டிலுள்ள பாஸ்டன் நகரில் 1917-ம் ஆண்டு மே மாதம் 29-ம் தேதியன்று கென்னடி பிறந்தார். தந்தையின் பெயர் ஜோசப் கென்னடி. பெரிய செல்வந்தர் தாயாரின் பெயர் ரோஸ் ஃபிட் ஜெரால்டு.

கென்னடி பிறந்த சில நாட்களிலேயே அவர்களது குடும்பம் பாஸ்டனை விட்டு நியூயார்க் நகருக்கு வந்து விட்டது.

பள்ளிப் பருவம் வந்ததும் பெற்றோர் தங்கள் அருமை மகனைப் பள்ளியில் சேர்த்தனர்.கென்னடி படிப்பில் மிகுந்த ஆர்வமுடையவராகத் திகழ்ந்தார். அதே போன்று விளையாட்டுத் துறைகளிலும் சிறந்து விளங்கி, பள்ளி நாட்களிலேயே பல பரிசுகளைப் பெற்றார்.

எல்லா விளையாட்டுக்களையும் விட நீச்சல் போட்டி என்றால் கென்னடிக்கு மிகவும் பிடிக்கும். இதில் கென்னடி நிகரற்று விளங்கினார். தண்ணீரோடு விளையாடுவதில் அவருக்கு அப்படி ஒரு ஆசை.

கென்னடி தனது பதினெட்டாவது வயதில் பட்டப்படிப்பை முடித்தார். பின்னர் "ஹார்வெர்டு" பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்தார்.

தன் சக மாணவர்களை விட கென்னடி எதிலும் சற்று துணிச்சல் மிக்கவராகவே விளங்கினார்.

படிப்பிலும், விளையாட்டுக்களிலும் கவனம் செலுத்திக் கொண்டிருந்த கென்னடியின் மனதில் அரசியல் ஆர்வம் மெல்ல வளரத் தொடங்கியது.

காலையில் எழுந்தவுடன் அன்றாடம் வரும் தினசரிகளை மிகுந்த ஆர்வத்துடன் வரிவிடாமல் படித்து முடிப்பார்.

செய்தித்தாள்களில் வரும் நாட்டு நடப்புகளைப் பற்றியும், அரசியல் தொடர்பான விஷயங்களையும் ஆழ்ந்து படிப்பார். பின் அவைப் பற்றித் தன் சக மாணவர்களுடன் விவாதிப்பார்.

சிலரது பிரபலமான கட்டுரைகளைப் படிக்கும் போது, "நாமும் ஏன் இதுபோல் அரசியலைப் பற்றி எழுதக்கூடாது, இவர்களைப் போல் அரசியலில் ஈடுபட்டு, நாமும் ஏன் நாட்டுக்காக உழைக்கலாகாது" என்றெல்லாம் எண்ணிக் கொள்வார்.

இப்படிப்பட்ட சிந்தனைகளின் விளைவாக, "இங்கிலாந்து ஏன் தூங்கியது?" என்ற தலைப்பில் அருமையான ஒரு நூல் ஒன்றைஎழுதி புத்தகமாக வெளியிட்டார்.

அந்த நூல் நன்கு பிரபலமாகி கென்னடிக்கு பெரும் புகழை ஈட்டித் தந்தது.

இது கென்னடி சற்றும் எதிர்பாராத ஒன்று. தம்முடைய முதல் நூலுக்குக் கிடைத்த வரவேற்பு; அவருக்கு தமது எழுத்தாற்றல் மீது மிகுந்த நம்பிக்கையை ஊட்டியது.

முதல் முயற்சி வெற்றி அடைந்து விட்டதல்லவா; மகிழ்ச்சிக்குக் கேட்பானேன்:

கென்னடி தொடர்ந்து எழுதத் துவங்கினார். பல்கலைக் கழக தொடர்பைவிட; பத்திரிகைத் துறை அவர் மனதை மிகவும் கவர்ந்தது. அதில் மிகுந்த ஈடுபாடு கொண்டார்.

அப்போது—

இரண்டாவது உலகப் போர் ஆரம்பமான நேரம். பத்திரிகைத் தொழில் பற்றிய சிந்தனையை விட்டு, திடீரென்று, "நாமும் போரில் ஈடுபட்டு, நம்மாலான சேவையை நாட்டிற்காகச் செய்தால் என்ன" என்று எண்ணலானார்.

இந்த எண்ணத்தின் ஆர்வம் அவரை கப்பற் படையில் சேர்வதற்கான ஆர்வத்தை வளர்த்தது. அதற்காக விண்ணப்பித்தார்,

கென்னடியின் விண்ணப்பத்தை கடற்படை அதிகாரிகள் ஏற்க மறுத்து விட்டனர். இவரது முதுகெலும்பு பழுது பட்டிருந்ததே அதற்கு காரணம்.

இதனால் கென்னடி மிகவும் கவலையடைந் தார். ஆயினும் அவர் தன்னுடைய எண்ணத்தை மாற்றிக் கொள்ள எண்ணவில்லை.

விரைவிலே தன்னுடைய பழுதுபட்ட முதுகெலும்பிற்கான சிகிச்சைகளில் ஈடுபட்டார்.

நன்கு உடற்பயிற்சி செய்து; தன்னை கடற் படைக்குத் தகுதியாக்கிக் கொள்ள வெகுவாக உழைத்தார்.

மறுமுறை கென்னடி கடற்படைக்கு விண்ணப் பித்த போது அதிகாரிகள் மறுப்பேதும் கூறாமல்; அவரது உடலை பரிசோதித்து விட்டு தேர்வு செய்து விட்டனர்.

அமெரிக்க கப்பற் படையில் பணியாற்றிய கென்னடி, கப்பலைப் பற்றிய நுணுக்கங்களையும் போர் முறைக்கான பயிற்சிகளையும் முறையாகக் கற்றுத் தேர்ந்தார்.

தண்ணீரைக் கண்டால் குஷியோடு குதித்து நீச்சலடிக்கத் துவங்கும் கென்னடியின் கண் முன் னால் இப்போது—

எங்கு பார்த்தாலும் வெள்ளம். பரந்து விரிந்த கடல். உத்திரவின்றி அவரால் குதித்து விட முடியுமா?

இந்த சமயத்தில் இரண்டாவது உலகப்போர் தீவிரமடைந்திருந்தது. ஜப்பானியர்கள் அமெரிக்

கத் துறைமுகங்களைத் தாக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பெர்ல் துறைமுகத்தை ஜப்பானியர்கள் தாக்கினார்கள். அமெரிக்கக் கடற்படை உஷார்படுத்தப் பட்டது. போரில் ஈடுபட வேண்டி சான்பிரான்ஸிங் கோவிலிருந்து, தெற்கு பசிபிக் கடலை நோக்கி லெப்டினன்ட் கென்னடி அனுப்பி வைக்கப் பட்டார்;

ஜப்பானிய கப்பற் படையினரை முன்னேற விடாமல் அங்கே நேச நாட்டுக் கப்பற் படையினர் தடுத்துப் போராடிக் கொண்டிருந்தன,

1943-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரவு 2 மணி. போர் பணிக்காக அங்கே வந்து சேர்ந்த லெப்டினன்ட் கென்னடி; அமெரிக்கக் கப்பற்படையைச் சேர்ந்த பி. டி. 109 என்கிற அதிவேக கண்காணிப்பு படகில் ஏறி, கடலில் சுற்றிக் கொண்டிருந்தார்.

அப்போது அங்கே தூரத்தில் ஒரு ஜப்பானிய நாசகாரக் கப்பல் வருவதைக் கென்னடி கண்டார். அந்தக் கப்பல் வேகமாக முன்னேறி வந்து கொண் டிருந்தது. மிகப் பெரிய பீரங்கிகளும், பலதரப் பட்ட தாக்குதல் சாதனங்களும் பொருத்தப்பட்ட அந்த கப்பலில் இருந்தவர்கள் கென்னடியின் கண் காணிப்புப் படகை கவனித்து விட்டனர்.

இதை உணர்ந்த கென்னடி தனது படகை வேகமாகச் செலுத்தினார். ஆனால்—

அதற்குள் ஜப்பானிய நாசகாரக் கப்பல் கென்னடியின் பி. டி. படகை நோக்கி வேகமாக முன்னேறி பீரங்கிகளால் தாக்கத் துவங்கின. பி. டி. படகு நிலைகுலையத் துவங்கியது.

கண்காணிப்புப் படகின் தலைவரான கென்னடி, தன்னுடனிருந்த நண்பர்களை எதற்கும் தயாராகும்படி எச்சரித்தார். அடுத்த வினாடி ஜப்பானியக் கப்பலிலிருந்து புறப்பட்டு வந்த பீரங்கி குண்டு தாக்குதலில் கென்னடியின் படகு தீப்பற்றி எரிந்தது. கென்னடியுடன் இருந்த கப்பற்படை வீரர்கள் கடலில் தூக்கி எறியப் பட்டனர்.

மற்றவர்களோடு கடலில் விழுந்த கென்னடி இறக்கப் போகிறாம் என்கிற நினைப்போடு தண்ணீருக்கு மேல் தலையைத் தூக்கிப் பார்த் தார்.

ஒன்றுமே அறியாததுபோல் ஜப்பானிய நாச காரக் கப்பல் தூரத்தே போய்க் கொண்டிருந்தது.

சட்டென்று தன்னருகே மிதந்து வந்த படகின் நீளமான ஒரு மரத்துண்டை கென்னடி நீந்திச் சென்று தாவிப் பிடித்துக் கொண்டார்.

ஒரு மரத்துண்டின் பாதுகாப்பில் இருந்த கென்னடி, தனது நண்பர்கள் யாராவது

தெரிகிறார்களா என்று சுற்றும் முற்றும் பார்த்தார்.

ஒவ்வொருவர் பெயரையும் சொல்லி அழைத்தார். அறுவர் பதில் குரல் கொடுத்தனர். இரு நண்பர்கள் இறந்த உடல் தெரிந்தது. கென்னடி மனம் வருந்தி பிரார்த்தனை செய்தார்.

மற்றவர்களைப் பற்றிக் கவலை கொண்டார். மக்மகான் என்ற சகமாலுமி தீக்காயத்துடன் நீரில் தத்தளித்துக் கொண்டிருந்தார். ஹாரிங் என்ற மற்றொரு நண்பர் காலில் பட்ட காயத்தினால் நீந்த முடியாமல் தத்தளித்தார்.

கண்காணிப்புப் படகின் தலைவராயிருந்த கென்னடி தனது முதுகு வலியையும் மறந்து மிகச் சிரமப்பட்டு அவர்கள் இருவரையும், உடைந்து மிதந்த தன் படகின் பகுதிக்குக் கொண்டு வந்தார்.

மீதமுள்ளவர்களையும் காப்பாற்ற கென்னடியின் கண்கள் கடலெங்கும் துழாவிக் கொண்டிருந்தன. கண்ணில் பட்ட ஒவ்வொருவராய் பதினோரு வீரர்களைக் காப்பாற்றினார்.

பொழுது விடிந்து விட்டது. ஆயினும் உதவிப் படகுகள் எதுவும் வந்து சேரவில்லை. நேரம் ஆக ஆக அவர்கள் இருக்கும். படகுத் துண்டும் நீரில் அமிழத் துவங்கியது.

இன்னும் தாமதித்தால் ஆபத்து என்கிற நிலையில் மக்மானை தோளில் சுமந்தபடி நீந்தி சற்று தூரத்தில் தெரிந்த ஒரு தீவுக்குச் சென்றனர். மற்றவர்களும் கென்னடியோடு நீந்தி வந்தனர்.

சுமார் ஆறு மணி நேரம் நீந்தி அவர்கள் அனைவரும் அந்தத் தீவின் கரையை அடைந்தனர். அன்று மூன்றாவது நாள். கடலில் நீந்தி வந்த களைப்போடும்; உதவிப்படகு வராத ஏமாற்றத் தோடும்; தாங்க முடியாத பசியோடும்; ஒவ்வொரு வரும் தொலைவில் தெரிந்த இன்னொரு தீவிற்கு நீந்திச் சென்றனர்.

அங்கிருந்து சிறிது தூரத்தில் இருந்த மற்றொரு தீவிற்கு நீந்திச் சென்றனர்.

அங்கே சில தென்னை மரங்கள் இருப்பதைக் கண்டதும் அனைவரும் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டனர்.

அவர்களுடைய தாங்க முடியாத தாகத்தை யும், பசியையும் அங்கிருந்த தென்னை மரங்கள் தீர்த்து வைத்தன.

கென்னடியும் அவரது சகாக்கள் அறுவரும் இங்கே உதவிப் படகிற்காகக் காத்திருக்கும் வேளையில் கடற்படை தளத்தில் ஒரு இரங்கல் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. பி. டி. 109-ல் பயணம் செய்து கண்காணிப்புக்குச் சென்ற லெப்டினென்ட் கென்னடி; மற்றும் அவரது ஆறு

சகாக்களுக்குமாக, காப்டன் இறுதி அஞ்சலி செலுத்தி பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்.

"எங்களை விட இன்னும் அதிக நம்பிக்கை வைத்திருந்த ஓர் இலட்சியத்திற்காகக் கென்னடியும், அவர் சகாக்களும் உயிர் துறந்தார்கள். அவர்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப் போம்."

1943-ம் ஆண்டிலேயே கென்னடி மாண்டு விட்டதாக எண்ணி அவருக்காக இறுதி அஞ்சலியும், பிரார்த்தனைகளும் கூட நிகழ்ந்துவிட்டன.

நான்காவது நாளும், உதவிக்கு யாரும் வராததால், கென்னடியும் ஹராஸ் என்ற வீரரும் இன்னொரு தீவிற்கு நீந்திச் சென்றனர். அங்கிருந்த சில சுதேசிகளிடம் தங்கள் நிலையைச் சொல்லி உதவி வேண்டினர்.

அவர்கள் கென்னடியையும், ஹராஸையும் தங்கள் சிறு படகின் மூலம் நியூஜார்ஜியாவிலிருக்கும் நியூஜிலாந்து காலாட்படைத் தளபதியிடம் அழைத்துச் சென்றார்கள்.

தளபதி மூலம் அமெரிக்க கப்பற்படைக்கு செய்தி தெரிவிக்கப்பட்டது. அடுத்த சில மணி நேரத்தில் உதவிப் படகு வந்து சேர்ந்தது. அதன் மூலம், தனது மற்ற வீரர்களையும் அழைத்துக் கொண்டு கப்பல் தளத்திற்கு வந்து சேர்ந்தார் கென்னடி.

மாண்டவர்கள் மீண்டு வந்தது போல், கென்னடியையும் சகவீரர்களையும் கண்ட தளபதியும், மற்றவர்களும் அடைந்த மகிழ்ச்சியை வர்ணிக்க இயலாது.

அஞ்சலி நிகழ்ச்சி நடந்த தளத்தில் மீண்டும், கென்னடிக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப் பட்டது. கடற்படை அவரை அதிகாரபூர்வமாக கௌரவித்தது, துணிவு மிக்க இவரது தலைமை எல்லோராலும் பாராட்டப்பட்டது.

கென்னடியின் இந்தத் தீரச் செயல்களுக்காக "பர்ப்பிள் ஹார்ட்" என்னும் விருது வழங்கப் பட்டது. "கென்னடியின் உறுதி; சிரமங்களைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் நிறைந்த தலைமை ஆகிய அருங்குணங்கள். அனேக உயிர்களைக் காப் பாற்ற உதவின"— என்று பாராட்டுப் பத்திரத்தை யும்? கடற்படை பதக்கத்தையும்; கென்னடி பெற் றார்.

இதன் பிறகு உடல்நலம் கெட்டதால் தொடர்ந்து கடற்படையில் பணியாற்ற கென்னடி யால் இயலவில்லை. ஆகவே அதை விட்டு விலகி வீடு வந்து சேர்ந்தார்.

சில நாட்களிலேயே கென்னடி முழுநேரமும் அரசியலில் ஈடுபடலானார்.

சட்ட மன்றத் தேர்தலில் போட்டியிட்டு, ஜெயித்து 1947-ம் ஆண்டில், காங்கிரஸ் உறுப்பின

ராகப் பதவி ஏற்றார். அப்போது அவருக்கு வயது முப்பதுகூட நிரம்பியிருக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து, எப்படியாவது செனட் உறுப்பினராகவும் ஆகிவிட வேண்டும் என்கிற ஆசை கென்னடியின் நெஞ்சில் துளிர்விட்டது.

செனட்டர் பதவியைப் பிடிப்பது என்பது அத்தனை சுலபமான காரியமா? ஆயினும் அதற்காக என்ன பாடுபடவும், எத்தனை மணி நேரம் உழைக்கவும் கென்னடி தயாராயிருந்தார்.

ஒரு குறிப்பிட்ட நாளில் செனட் மெம்பர் பதவிக்கான விண்ணப்பத்தில் கையெழுத்திட்டு அனுப்பி வைத்தார் கென்னடி.

மாஸா சூஸட்சிலிருந்து யு. எஸ். மெம்பர் பதவிக்கு போட்டி விடுவது என்றது கென்னடியின் முடிவு!

அதற்காக அவர் பழுத்த அரசியல்வாதியான ஹென்றி காபட் லாட்ஜ்" என்பவரை எதிர்த்துப் போட்டியிளவும் துணிந்தார் கென்னடி.

அதற்காக அவர் இரவு பகல் பாராமல், தன் நண்பர்களுடன் இடைவிடாத பிரசாரத்தில் இறங்கினார். தினமும் பலநூறு மைல்கள் காரில் சுற்றுப் பயணம் செய்து அயராது பாடுபட்டார். இறுதியில்—

'அரசியல் புலி' என்று கருதப்பட்ட ஹென்றி காபட் லாட்ஜை விட 70,000 வோட்டுகள் அதிகம் பெற்று மாபெரும் வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியை அடைவதற்காக கென்னடி பல நாள் ஊண் உறக்கம் மறந்தார். இரவு பகல் பாராமல் அலைந்தார். குறைந்த பட்சம் பத்து லட்சம் பேர்களுடனாவது பேசியிருப்பார். ஏழரை லட்சம் பேர்களுடன் கை குலுக்கியிருப்பார்.

அத்தனையும் வீண்போகவில்லை. 1953-ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ம்தேதி செனட் அறையில் கென்னடி பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

இந்தத் தேர்தலின்மூலம் அமெரிக்க அரசியலில் தனியிடம் பெற்ற கென்னடி அரசியல்வாதிகள் பற்றிய ஆய்வு நூல் ஒன்றை "தீரர்களின் வாழ்க்கை" என்ற பெயரில் எழுதினார். அந்த நூல் அமெரிக்காவில் பெரிதும் மதித்துப் பாராட்டபட்டது.

இந்த நூலை எழுதியதற்காக அமெரிக்க மக்களால் பெரிதும் மதிக்கப்படும் "புலிட்சர் பரிசு" கென்னடிக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதன் மூலம் கென்னடியின் புகழ் எங்கும் பரவியது.

**திருமண வாழ்க்கை**

கென்னடி செனட்டர் ஆவதற்கு முன்பு, ஒரு பிரமாண்ட விருந்தின்போது, முதன் முதலாக மிஸ். ஜாக்குலினை கென்னடி சந்தித்தார். அந்த சந்திப்பு நாளடைவில் வளர்ந்து பெருகி அவர் களது திருமணத்தில் வந்து முடிந்தது. இத் திருமணம்—

நியூபோர்ட் மரியன்னை மாதாகோவிலில் 1953-ம் ஆண்டு செப்டம்பர் 12-ம் தேதி நடை பெற்றது.

திருமணத்திற்கு ஆயிரக்கணக்கான பிரமுகர் களும், நண்பர்களும், அரசியல்வாதிகளும் வந் திருந்தனர்.

கென்னடியைப் போலவே ஜாக்குலின் கென்னடி யும் புகழ்மிக்கவர். பத்திரிகையாளராகவும், பிரபல புகைப்பட நிபுணராகவும்; முதல் அமெரிக்கப் பெண்மணி என்கிற பெருமையும் பெற்றவர். எல்லாவற்றிற்கும் மேலாக மிகச்சிறந்த அழகி.

கென்னடி ஜாக்குலின் தம்பதிக்கு "கரோலின்" என்ற ஒரு பெண்ணும்; ஜான் ஜான் என்ற மகனும் பிறந்தனர். வாஷிங்டனில் புதுக்குடித்தனம் நடத்தி வந்தனர்,

வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியாகச் சென்று கொண்டிருந்தது,

தமது 42-வது வயதில் கென்னடி அமெரிக்க குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு மகத்தான வெற்றினார்.

இந்த பதவியின்போது கென்னடியின் ஒவ்வொரு செயல்களும், பெருமைமிக்கதாகவும் மனிதாபிமானம் மிக்கதாகவும், அமெரிக்காவின் பெருமையை உயர்த்தும் விதத்திலும் இருந்தன. உலகின் கவனமே அமெரிக்காவின் பக்கம் திரும்பும் அளவிற்கு கென்னடியின் பணிகள் ஒவ்வொன்றும் இருந்தன.

போரை ஒழித்து, நிரந்தரமான அமைதியை நிலைநிறுத்தப் பாடுபட்டார். நீக்ரோ மக்களுக்கு, சட்டப்படி சிவில் உரிமைகள் கிடைக்க வகை செய்தார்.

இந்தியாவின் நண்பராக மட்டுமின்றி; அனைத்து நாட்டுடனும், நட்புரிமையுடனேயே பழகினார்.

"நாடு நமக்கு என்ன செய்தது என்று கேட்பதை விட; நாட்டுக்கு நாம் என்ன செய்தோம் என்று முதலில் கேட்டுக் கொள்வது நல்லது" என்பது கென்னடியின் கருத்து.

அனைவரையும் சமமாகப் பாவித்துப் பழகும் இயல்புடையவர் கென்னடி. அமெரிக்காவில்

வாழும், கோடிக்கணக்கான நீக்ரோக்களின் நலனின் அக்கரை காட்டினார்.

இதனால் உள் நாட்டிலேயே அவர் மீது பலருக்கு வெறுப்பும் துவேஷமும் உண்டாயிற்று.

இந்நிலையில் கென்னடி டெக்ஸாஸ் மாநிலத்திற்கு தன் மனைவி ஜாக்குலினுடன் சுற்றுப் பயணம் மேற் கொண்டார்.

அங்கு அவருக்கு எதிர்ப்பு அதிகம் என்று எச்சரிக்கப்பட்டும் கென்னடி அதற்காக அஞ்சவில்லை.

1963-ம்ஆண்டு நவம்பர் 22ம்தேதி டெக்ஸாஸ் நகரத்திலுள்ள லவ்ஃபீல்டு விமான நிலையத்தில் தன் மனைவியோடு வந்திறங்கிய கென்னடி பலத்த மகிழ்ச்சி ஆரவாரத்தோடு வரவேற்கப்பட்டார்.

விமான நிலையத்திலிருந்து வெளியே வந்த கென்னடியும், ஜாக்குலினும் டெக்ஸாஸுக்கு காரில் பயணமானார்கள்.

வீதியில் இரு பக்கமும் இருந்த மக்கள் கையசைத்து மகிழ்ச்சி தெரிவித்தனர். டெக்ஸாஸ் மக்களின் குதூகல ஆரவாரம், கென்னடியின் மனதைத் தொட்டது.

வண்டி ஒரு மூலையில் திரும்பிய போது, தெரு முனையிலிருந்த ஆறு மாடிக் கட்டிடம் ஒன்றின்

ஐந்தாவது மாடியிலிருந்து; கொடியவன் ஒருவன் சுட்ட துப்பாக்கி குண்டுகள் கென்னடியின் குரல் வளையைத் துளைத்துக் கொண்டு சென்றது.

இமைக்கும் நேரத்தில் எல்லாம் நடந்து விட்டது.

ரத்த வெள்ளத்தில் துவண்ட கணவனை ஜாக்குலீன் மார்போடு அணைத்துப் பிடித்துக் கொண்டாள். கார் மருத்துவமனையை நோக்கி 60 மைல் வேகத்தில் பறந்தது.

தீவிர வைத்திய உதவிகள் அளித்தும், அந்த மகத்தான மனிதர் கென்னடியின் உயிரைக் காப்பாற்ற எந்த மருத்துவர்களாலும் இயல வில்லை.

கென்னடியின் மறைவைக் கேட்டு உலகமே கண்ணீர் வடித்தது. அன்பைக் காட்டவும், அஞ்சலி செலுத்தவும் கண்ணீரை விடப் புனிதமான பொருள் வேறு என்ன இருக்கிறது!

# மார்டின் லூதர்கிங்

## (1929—1969)

**''எங்களுக்கு வன்முறையில் நம்பிக்கை இல்லை. எங்கள் பாதுகாப்பிற்குரிய ஆயுதம் அஹிம்சை ஒன்றுதான். இறைவன் படைப்பில் அனவரும் சமமே. இந்த வெற்றி கிட்டும் வரை நாங்கள் அகிம்சை முறையிலேயே போராடுவோம்.''**

**—மார்ட்டின் லூதர்கிங்**

''இறைவன் படைப்பில் அனைவரும் சமமே— அன்னியன் அடிமை என்கிற தளைகளைத் தகர்த்தெறிந்துவிட்டு நாம் அனைவரும் ஒன்றுபட்ட அமெரிக்க பிரஜைகளாக வாழ வகை செய்தல் வேண்டும்.

கறுப்பர் என்றும், வெள்ளையர் என்றும், இனம், நிறம் இவற்றால் பிளவுபட்டு பிரிந்து வாழ எண்ணாமல்—

ஒரு அமெரிக்க பிரஜைக்குரிய சகல மனித உரிமைகளும் பாகுபாடின்றி கறுப்பர்களுக்கும் மறுக்கப்படாமல் வழங்கல் வேண்டும்.

ஆளுக்கு ஒரு நீதி என்பதை ஒரு அவமான மாகக் கொண்டு சட்டங்கள் அனைத்தும் சகலருக் கும் சமமாக்கப்பட வேண்டும். ஒற்றுமையாய் வாழ்வோம்; ஒன்றுபட்ட அமெரிக்காவை உருவாக்குவோம்.”

இவையே மார்டின் லூதர் கிங்கின் லட்சியக் கனவுகளாகத் திகழ்ந்தன. மனித உரிமைக்காகப் போராடிய அந்த மாமனிதரின் உன்னதக் கனவு அவரது காலத்திலேயே படிப்படியாகப் பலிக்கத் தொடங்கி விட்டது.

இன்றைய அமெரிக்கா மார்டின் லூதர்கிங் கண்ட பொற் கனவை, பூரணமாக நினைவாக்கி விட்டது.

அதற்கு அடையாளமாக அமெரிக்கஜனாதிபதி யின் ஆணைப்படி லூதர் கிங்கை கௌரவிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ‘ஜனவரி மாதம் மூன்றாவது திட்கட் கிழமையை தேசிய தினமாக’, அமெரிக்க அரசு கொண்டாடி வருகிறது.

## ஒரு புதிய சகாப்தம் பிறந்தது

அமெரிக்காவில் நீக்ரோ மக்கள் வசிக்கும் ‘அட்லாண்டா’, என்னும் ஊரில் 1929-ம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ம் தேதி மார்டின் லூதர் கிங் பிறந்தார்.

தந்தையின் பெயரும் மார்டின் லூதர் கிங் ஆகையால் மகனை, மார்டின் லூதர்கிங் ஜூனியர் என்று அழைத்தனர். தந்தை அட்லாண்டா. கிருஸ்துவ ஆலயம் ஒன்றில் மதகுருவாக இருந்தார். தாயாரின் பெயர் 'ஆல்பர்டா வில்லியம்ஸ் கிங்.'

லூதர் கிங்கிற்கு 'கிறிஸ்டினா' என்ற மூத்த சகோதரியும், மார்டின் என்றும் ஒரு இளைய சகோதரனும் இருந்தனர்.

படிப்பில் கிங் மிகவும் கெட்டிக்காரராகத் திகழ்ந்தார். ஆரம்பக் கல்விகளைய முடித்துக் கொண்டு தமது 15-வது வயதிலேயே அட்லாண்டா விலுள்ள "மோர்ஹவுஸ்" என்னும் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் தகுதியைப் பெற்றுவிட்டார்.

கல்லூரியில் படிக்கும் போதே அவருக்கு கறுப்பு இனத்தலைவர்களின் மத சம்பந்தமாக ஆர்வம் ஏற்பட்டது.

1948-ஆம் ஆண்டில் படிப்பு முடிந்ததும், பாஸ்டன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். மத ஆராய்ச்சிக்கான பி.எச்.டி, (Ph.D.) டாக்டர் பட்டத்தை 1955-ஆம் ஆண்டில் பெற்றார்.

## திருமண வாழ்க்கை

பாஸ்டன் கல்லூரியில் படித்துக் கொண் டிருந்தபோது அதே கல்லூரியில் இசை பயின்று

கொண்டிருந்த "கொரிட்டா ஸ்காட்"டை 1953ஆம் ஆண்டு கிங் மணந்தார்.

## இனவெறிக்கு எதிர்ப்பு

அலபாமா மாநிலத்தில், மாண்ட் கோமரி நகரத்தில் பஸ்ஸில் பயணம் செய்யும் றெுப்பர்களுக்கும், வெள்ளையர்களுக்கும் தனித்தனியாக இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

பஸ்களின் பின்புறத்தில் தான் கறுப்பர்கள் அமரவேண்டும்; அல்லது நிற்கவேண்டும் என்பது விதியாகும்.

பயணம் செய்யும் பஸ்களில் இருக்கும் இட ஒதுக்கீட்டு முறைக்கு கிங் எதிர்ப்பு தெரிவித்தார்.

ஒரு சமயம் 'ரோசா பார்க்' என்னும் கறுப்புப் பெண்மணி பஸ்ஸில் வெள்ளையரது இடத்தில் அமர்ந்து விட்டதால்—சட்டத்தை மீறி விட்டதாக கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் கிங்கின் மனதைப் பெரிதும் பாதித்தது.

கறுப்பு இனத்தவர்கள் ஒற்றுமையாக கிங் தலைமையில் திரண்டு; அரசுக்குத் தங்கள் கண்டனத்தை தெரிவித்தனர்.

தமது போராட்டத்தை கிங் தொடர்ந்து நடத்தினார். தன் ஆதரவாளர்களிடம கிங் தமது முதல் பேச்சிலேயே, "வன்முறைக்குச் சிறிதும் இட மளிக்காமல் அஹிம்சையையே அனைவரும்கடைப் பிடிக்கவேண்டுமென்று" கோரினார். கிங் அரசுக்கு அனுப்பிய தமது அறிக்கையில், பின் வருமாறு எழுதியிருந்தார்:

"அமெரிக்க ஜன நாயகத்தின் மாண்பு என்ன வெனில் மக்கள் உரிமைக்காகக் கண்டனக் குரல் எழுப்புவதேயாகும்."

"எங்களுக்கு வன்முறையில் நம்பிக்கைஇல்லை. எங்கள் பாதுகாப்பிற்குரிய ஆயுதம் அஹிம்சை. ஒன்றுதான். வெற்றிகிட்டும் வரை நாங்கள் அஹிம்சை முறையிலேயே போராடுவோம்," என்று உறுதியுடன் கூறினார்.

கருப்பர்கள் அனைவரும் 'பஸ்களில் பயணம் செய்யாது புறக்கணிப்பு போராட்டம்' நடத்தினர்.

**முதல் வெற்றி**

1956-ம் ஆண்டு பஸ்களில் கறுப்பர்களுக்கும் சமத்துவமுள்ள இடங்களை ஒதுக்குமாறு அமெ ரிக்க உச்ச நீதி மன்றம் (சுப்ரீம் கோர்ட்) உத்தர விட்டது.

இன அடிப்படையில் இழைக்கப்படும் அநீதியை எதிர்த்துப் போராடியதில் கிங் அடைந்த இந்த

வெற்றி அவருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தது!

அந்த கால கட்டத்தில் தென் மாநிலங்களில் பஸ்களில் மட்டுமின்றி, பள்ளிகள், பொழுது போக்கு இடங்கள்; ஓட்டல்கள் போன்றவற்றிலும் இன ஒதுக்கல் தீவிரமாக நிலவியது.

கறுப்பர்களின் ஓட்டு உரிமையைப் பறிப்பதற்காகப் பல மாநிலங்களில் முயற்சிகள் நடைபெற்ற வண்ணமிருந்தன. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டே இருந்தனர். ஆயினும் நிலைமையில் சிறிதும் முன்னேற்றம் இல்லை. கறுப்பர்களைப் பற்றி அரசு கண்டும் காணாதது போல் நடந்து கொண்டது.

அமெரிக்காவில் 1950 முதல் 1960 வரையுள்ள பத்தாண்டுகளில் சிவில் உரிமைகள் இயக்கத்தின் முக்கிய தலைவராகத் திகழ்ந்தவர் மார்டின் லூதர் கிங் தான்.

மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவில் நடத்திய சத்தியாகிரகப் போராட்டங்களைப் பற்றி கிங் அறிந்திருந்தார். காந்திஜி கையாண்ட அஹிம்சா முறையையும், சத்தியத்தையுமே மார்டின் லூதர் கிங்கும், தனது போராட்டங்களின் போது முற்றிலுமாகப் பின் பற்றினார்.

சமூக நீதி கோரிய நீக்ரோ இன மக்களின் நம்பிக்கைக்குரிய பிரதிநிதியாக அவர் குரல் எழுப்பினார்.

தனது நேர்மையாலும், சேவைத் திறத்தினாலும், சாதுர்யமுள்ள இனிய சொற்பொழிவுகளின் மூலமும் வெள்ளையர் உட்பட அனைத்து மக்களின் ஆதரவையும் திரட்டிய மார்டின் லூதர் கிங் உலகப் புகழ் பெற்றார்.

லூதர் கிங் அஹிம்சையில் அசையாத உறுதியும் நம்பிக்கையும் கொண்டிருந்தாலும்: அவர் பல முறை வன் முறைக்கு ஆளாக்கப்பட்டார்.

வெள்ளை இன வெறியர்கள் தெருக்கற்களைப் பொறுக்கி அவர் மீது சரமாரியாக வீசித் துன்புறுத்தியதுண்டு.

மாண்ட் கோமரியில் உள்ள அவரது வீட்டை வெடிகுண்டு வைத்துத் நகர்த்தனர். ஆயினும் அவர் சிறிதும் மன உறுதி குலையவில்லை.

1963-ஆம் ஆண்டில் இதே சிங் தலைமை தாங்கி தமது ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களுடன் பர்மிங் ஹாம் நகரில் பெரும் பேரணி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார். இனவெறி தலை விரித்தாடும் நகரமாக பர்மிங்ஹாம் நகரம் திகழ்ந்து கொண்டிருந்தது.

வெள்ளையருக்கு மட்டுமே—என்று தனியாக ஒதுக்கப்பட்ட பல இடங்களில் கறுப்பர் இன மாணவர்கள் நுழைந்து தங்கள் அதிருப்தியையும், கண்டனத்தையும் தெரிவிக்கத் தொடங்கினர்.

அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜான் எஃப் கென்னடி சிவில் உரிமைகளுக்கு உதவி யாக அவர் போதுமான நடவடிக்கைகள் எடுக்க வில்லை என கிங் கருதினார்.

இதனைக் கண்டித்தே கிங் தமது பெர்மிங் ஹாம் பேரணி ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்,

உரத்த கோஷங்களுடன் அமைதியாகப் பேரணி நடத்தியவர்கள் மீது போலீசார் நாய் களை ஏவி விட்டனர்; கண்ணீர் குண்டுகளை வீசி னர்: தண்ணீர் பீய்ச்சி தடியால் அடித்தனர்,

பேரணியில் பங்கேற்ற ஏராளமான குழந்தை களும், பள்ளி மாணவர்களும், தாய்மார்களும் மிருகத்தனமாக போலீசாரால் தாக்கப்பட்டனர். நகர வீதியில் ரத்தம் பெருக்கெடுத்தோடியது.

இந்த துயரச் செய்தி பத்திரிகைகளில் கொட்டையெழுத்துக்களில் பிரசுரமாயின. வானொலியும், டெலிவிஷனும் படம் பிடித்துக் காட்டின. இது உலக மக்களின் மனதை நெகிழச் செய்து, கிங்கிற்கு ஆதரவைக் கூட்டின.

இதனையடுத்து — உடனடியாக ஜனாதிபதி தமது உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்தார். சிவில் உரிமைக்களுக்கான உத்தேச சட்ட மசோதாவைத் தயாரித்து நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தார்.

## வாஷிங்டன் பேரணி

ஜனாதிபதி கென்னடியால் நாடாளுமன்றத்துக்கு அனுப்பப்பட்ட சிவில் உரிமை சட்ட மசோதா, கிடப்பில் போடப்பட்டது போல் கேட்பாரற்று இருந்தது.

கென்னடியின் ஒப்புதல் மசோதாவை நாடாளுமன்றத்தை நிறைவேற்ற கோரவும், கருப்பர்களின் வேலையின்மைப் பிரச்னையை அரசுக்கு உணர்த்தவும் கிங் ஒரு பேரணியை நடத்தினார். இதில் பிற சிவில் ஆதரவாளர்களும் கிங் தலைமையில் இணைந்து கொண்டனர்.

1963-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28-ம் தேதி நடைபெற்ற இந்த மாபெரும் பேரணியில் பங்கேற்க நாட்டில் பல பாகங்களிலுமிருந்தும் மக்கள் ரயிலிலும், பஸ்ஸிலுமாக சுமார் இரண்டரை இலட்சம் அமெரிக்க நீக்ரோக்கள் கிங் தலைமையில் ஒன்று திரண்டனர்.

அவர்கள் அனைவரும், கோஷமெழுப்பியபடி— ஆனால் அமைதியாக அணிவகுத்தபடி நகர வீதி

களின் வழியே ஊர்வலமாக நடந்து சென்று வாஷிங்டன் தலை நகரிலுள்ள ஆப்ரகாம் லிங்கன் நினைவுச் சின்னம் அருகே ஒன்று கூடினர். இந்தப் பேரணியில் பல வெள்ளையரும் இருந்தனர்.

"வாஷிங்டன் படையெடுப்பு" என்று வர்ணிக் கப்பட்ட இந்த மாபெரும் பேரணி கூட்டத்தில் மார்டின் லூதர் கிங் நிகழ்த்திய உரை உணர்ச்சிப் பெருக்கெடுத்தது மட்டு மல்ல; சரித்திரப் புகழ் பெற்றதுமாகும்.

"அடிமைத் தளையிலிருந்து விடுபட்ட ஏழை கறுப்பர்களின் வேலையில்லா பிரச்சனையை அரசுக்கு உணர்த்தினார். கென்னடியின் ஒப்புதல் பெற்ற சிவில் உரிமை மசோதாவை நாடாளு மன்றம், நிறைந்த மனத்துடன், உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்றும் கோரினார்."

"எங்காவது ஓரிடத்தில் அநீதி ஏற்பட்டால், அது எல்லா இடங்களிலும் நீதிக்கு ஓர் அச்சுறுத்த லாகும்" என்றார்.

இனங்களிடையே சமத்துவமும்; அனை வருக்கும் சம நீதியும் கிடைக்க வேண்டும் என்பதே லூதர் கிங்கின் லட்சியக் கனவாகும், அன்று அவர் அதைப் பற்றியே உணர்ச்சி பொங்க உரை நிகழ்த் தினார்.

## நான் ஒரு கனவு கண்டேன்

"அந்தக் காலத்தில் அடிமைகளாக இருந்தவர்களின் மகன்களும்: எஜமானர்களாக இருந்து கொடுமைப் படுத்தியவர்களின் மகன்களும் ஒரே மேஜையில் சகோதரத்துவ உணர்வுடன் அமர்ந்து பேசும் காலம் வரும் என நான் கனவு காண்கிறேன்..."

"என்னுடைய நான்கு குழந்தைகள்- அவர்களுடைய நிறத்தைக் கண்டு மதிப்பிடப் படாமல், அவர்களது குணத்தையும், திறன்களையும் வைத்து மதிப்பிடப்படும் ஒரு காலம் வரத்தான் போகிறது என நான் கனவு காண்கிறேன்" என்று கிங் ஒரு தீர்க்க திரிசியை போல் அந்தப் பேரணி கூட்டத்தில் முழங்கினார்.

வரலாறு காணாத கிங்கின் அன்றைய பேரணியும்; கேட்டவர்களின் நெஞ்சை உருக்கும் வண்ணம் அவர் தம் கனவை வருணித்த விதமும், ஆற்றிய அரிய சொற்பொழிவும் உலக மக்களின் மனதை நெகிழச் செய்து விட்டது.

சிவில் உரிமைகளின் தார்மீக அடிப்படைகளை கிங்கைப் போல் அத்தனை தெளிவாகவும்; அழகாகவும், அஹிம்சாமுறையில் போராடியும்; பேரணிகள் நடத்தியும் அதுவரை யாரும் சொன்னதில்லை.

அவரது அந்த இயக்கம் மாபெரும் வெற்றியைத் தேடித் தந்தது.

நிறைவேற்றப்பட்ட இப்புதிய சட்டத்தின்படி பொது இடங்களில், எந்த நிலையிலும் 'இனவேறுபாடு காட்டப்படுவது' தடை செய்யப்பட்டது.

கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் ஏற்றத்தாழ்வின்றி சம வாய்ப்புத்தர இச்சட்டம் வகை செய்தது.

அன்றையச் சூழ்நிலையில் இது எவராலும் எண்ணிப் பார்க்க முடியாத சாதனை, அதை அன்பாலும், அஹிம்சையாலும், அறநெறியோடும் கிங் சாதித்தார். இதற்கு அவர் கொடும் வேதனைகளையும், கடும் சிறை வாசங்களையும், பயங்கரத் தாக்குதல்களையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்.

**நோபல் பரிசு**

இதே 1964-ஆம் ஆண்டு நோபல் சமாதானப் பரிசை லூதர் கிங் பெற்றார்.

சிவில் உரிமைகளுக்காக அஹிம்சா முறையில் போராடியும், ஆர்ப்பாட்டங்களும், அமைதிப் பேரணிகளும் நடத்தியதற்காக அவர் இந்த அரிய சமாதான விருதைப் பெற்றார்.

**வாக்குரிமையும்
வாழும் உரிமையும்**

இதனை அடுத்து—

1965-ஆம் ஆண்டில் வோட்டுரிமை சட்டத்தை அமெரிக்க நாடாளும் மன்றம் நிறைவேற்றுவதற்கு முக்கிய பங்காற்றினார் கிங். இதன் மூலம், கறுப்பு இனத்தவர்கள் அனைவரும் அங்கீகரிக்கப்பட்ட அமெரிக்கைப் பிரஜைகளின் அந்தஸ்தைப் பெற்று; வாக்களிக்கும் உரிமையையும் பெற்றனர்.

**சிக்காகோவில்
சீர்திருத்தம்**

இப்பொழுது லூதர் கிங்கின் சிந்தனை முழுவதும். அமெரிக்க நீக்ரோ இனயக்களின் நல வாழ்வினைப் பற்றியே சிந்தித்த வண்ணம் இருந்தது.

இந்த சமயத்தில் கறுப்பர்களின் நலவாழ்விற்காக சிகாகோவில் நடைபெறும் அமைப்பிற்கு உதவிட கிங் சிக்காகோ சென்றார்.

கறுப்பர்களின் சுகாதார மற்ற நகர்புற குடியிருப்புகள், வசதியற்ற பள்ளிக்கூடங்கள், வேலையின்மை, போன்ற குறைகளைச் சீரமைக்கக் கோரி சிக்காகோ நகரப் பகுதிகளில் போராட்டங்கள் நடத்திட கிங் முன்னின்று உதவினார்.

வெள்ளையர்கள் வாழும் பகுதிகளில் நீக்ரோக்களின் ஊர்வலங்கள் செல்லும் போது ஆத்திர

மடைந்த வெள்ளையர்கள் ஊர்வலத்தினர் மீது கற்களையும், பாட்டில்களையும் வீசி விரட்டியடித் தனர்.

ஆனால் கிங் அசைந்து கொடுக்கவில்லை. அமைதி குலையாமல் தன் பேரணியினை நடத்தி னார். கட்டுப்பாடாக சிக்காகோவின் அழகிய வீதி களில் பெரும் கோஷங்களை எழுப்பிய வண்ணம் கிங்கின் பின்னால் நீக்ரோ மக்கள் ஒன்று திரண்டு, தலை நிமிர்ந்து நின்றனர்.

நிலைமையை உணர்ந்த சிக்காகோ நகர உயர் அதிகாரிகள் இறங்கி வந்தனர். கிங்கிடம் ஆர்ப் பாட்டத்தை நிறுத்தும்படிக் கேட்டுக் கொண் டனர்.

கறுப்பர்களுக்கு சுகாதார முறையிலான குடியிருப்புகளை அமைத்துக் கொடுக்கவும்—பள்ளி களை சீரமைக்கவும்—நீக்ரோக்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை அளிக்கவும் உயர் அதிகாரி கள் ஒப்புக் கொண்டு வாக்களித்தனர்.

இதையடுத்து கிளர்ச்சி கைவிடப்பட்டது.

இது கிங்கிற்குக் கிடைத்த மற்றொரு வெற்றி யாகும்.

## புதிய இயக்கம்

மாணவர் அஹிம்சை ஒருங்கிணைப்புக் குழு (SNCC) என்ற அமைப்பைச் சேர்ந்த தலைவர்கள்

நீக்ரோ இனத்தவர்களிடம் வன்முறைப் பிரசாரத்தைத் தூண்டியது கிங்கிற்கு மன வருத்தத்தை அளித்தது. அவர்கள் "கறுப்பர்களின் அதிகார சக்தி" என்ற முழக்கத்தை ஊக்குவித்தனர் (Black Power).

1967-ஆம் ஆண்டில் அமெரிக்க சமுதாய முறைகள் குறித்து கிங் கடுமையாக விமர்சித்தார்.

செல்வத்தை ஏழைகளும் பணக்காரர்களும் பகிர்ந்து கொள்வதன் மூலமே உண்மையான சமூகநீதி மலரும் என்றார். பொருளாதார முன்னேற்றத்திற்கு வகை செய்யும் ஓர் இயக்கத்தை உருவாக்க அவர் விரும்பினார்.

எல்லா இனங்களையும் சேர்ந்த ஏழைகளையும் ஒன்று திரட்டுவதே அவரது நோக்கமாகும்.

வியட்நாம் போரில் அமெரிக்க அரசு தென் வியட்நாமை ஆதரிப்பதை கிங் கண்டித்தார். அவரது நிலை சரியானதே என்பது பின்னர் நிரூபிக்கப்பட்டது.

**ரத்த வெள்ளத்தில் கிங்கின் உடல்**

டென்னஸி மாநிலத்தில் உள்ள மெம்பிஸ் நகருக்கு; வறுமையில் சிக்கித்தவிக்கும் அன்றாடக்கூலி ஏழை மக்களின் இயக்கம் தொடர்பாக ஆதரவு திரட்ட மார்டின் லூதர் கிங் சென்றார்.

அங்குதான் அவர்—1968-ஆம் ஆண்டு ஏப்ரல் 4-ஆம் தேதியன்று — வெள்ளையர் ஒருவனின் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அப்போது மார்டின் லூதர் கிங்கின் வயது 39 தான்.

கிங்கினைச் சுட்டுக் கொன்ற ஜேம்ஸ் ஏர்ஸ்ரே என்ற வெள்ளையருக்கு 99 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து நீதி மன்றம் தீர்ப்பளித்தது. அந்த கொலையாளி ஏற்கனவே சிறையிலிருந்து தப்பிஓடி வந்தவன் என்பதும் இவ்வழக்கின் போது தெரிந்தது.

கிங் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து நீக்ரோ இன மக்கள் கோபமும், ஆத்திரமும், வருத்தமும் அடைந்தனர். கொதித்தெழுந்த மக்களின் அடக்க முடியாத கோபாவேசத்தால், 100 நகரங்களில் கலகமும், அமளியும் ஏற்பட்டது.

ஏழை நீக்ரோ மக்களின் எதிர்கால நல்வாழ்விற்கு நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய,கிங்கின் மறைவால் உலகமே துயரமுற்றது.

ஏழை மக்களின் உரிமைகளுக்கு குரல்கொடுத்த ஓர் உத்தமர் உயிர்த்தியாகம் செய்தார் என அனைத்து இன மக்களும் கண்ணீர் விட்டனர்.

கிங்கின் கல்லறையில் பொறிக்கப்பட்டுள்ள வாசகம் இது தான்:

"கடைசியில் விடுதலை யானேன், எல்லாம்
வல்ல இறைவனே! கடைசியில் நான்
சுதந்திரமடைந்து விட்டேன்."

**கிங் மறைந்தாலும்
அவர் லட்சியங்கள் வாழும்**

கிங்கின் மறைவுடன சிவில் உரிமை இயக்க யுகமே முடிந்து விட்டதாக சிலர் கருதியதுண்டு. ஆனால், அவர் மறைவிற்குப் பின்னும் அவரது பாணியில் இயங்கிக் கொண்டுதான் இருந்தது,

தென் மாநிலங்களில் கறுப்பர்—வெள்ளையர் கலந்து பயிலவும்; பழகவும் நிலவிய தடைகள் நீங்கு வதற்கு அவரது இயக்கம் வழி வகுத்தது.

அமெரிக்காவின் பெரும் பகுதிகளிலும் குடியிருப்பு வாடகைக்கு விடுவதிலும்; விற்பதிலும்; இனப் பாகுபாடு காட்டக் கூடாது என்ற சட்டத்தை அமெரிக்க நாடாளுமன்றம் இயக்கியது.

இது கிங்கின் இயக்கத்திற்குக் கிடைத்த இன்னொரு வெற்றியாகும்.

**ஓர் அரசன் ஆழ்ந்த துயில் கொள்கிறான்**

1980-ஆம் ஆண்டில் அட்லாண்டாவில் உள்ள கிங்கின் கல்லறையை அரசு விரிவு படுத்தி, அந்தப்

பகுதியை தேசிய சரித்திர நினைவுச் சின்ன ஸ்தல மாக அமெரிக்க அரசு அறிவித்தது.

### கனவு பலித்தது

கருப்பர்களும் வெள்ளையர்களும்—பல்வேறு துறைகளிலும்—நாட்டின் வளர்ச்சியிலும்— சோத ரர்களாய் கை கோர்த்துச் செல்லும் நாளைப்பற்றி லூதர் கிங் கண்ட கனவு—

இன்றைய அமெரிக்காவில் நினைவாக மலர்ந்து—பேதமற்ற மலர்களாக இனிய மணம் பரப்பிக் கொண்டிருக்கிறது.

# இந்திரா காந்தி

## (1918—1984)

**"வாழ்வா — சாவா என்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. எனது கடைசி மூச்சு உள்ள வரை நாட்டிற்காக உழைப்பேன். அப்படி அப்போது நான் இறக்க நேர்ந்தால், என் உடலி லிருந்து சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தமும் நாட்டை வலிமைப் படுத்தி; ஒற்றுமையான இந்தியாவை உருவாக்கும்."**

**—இந்திரா காந்தி**

பண்டித ஜவஹர்லால் நேரு; கமலா நேரு தம்பதியரின் ஒரே செல்ல மகளான இந்திரா பிரிய தரிசினி 1918-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ம் தேதி, அலகாபாத்திலுள்ள தன் பாட்டனாரின் வீடான ஆனந்த பவனம் என்னும் அழகிய மாகையில் பிறந்தார்.

இந்திராவின் பாட்டனாரான மோதிலால் நேரு பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். பிரபல வழக் கறிஞராகத் தொழில் புரிந்து வந்தார். தந்தை

ஜவஹர்லால் நேரு இந்திய சுதந்திரப் போராட்டத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு தேச சேவையில் ஈடுபட்டிருந்தார்.

தாய் கமலா நேரு காஷ்மீரத்தைச் சேர்ந்தவர். மெலிந்த உடலும் அழகிய தோற்றமும் கொண்டவர்.

இதையெல்லாம் நான்கு வயது சிறுமி இந்திரா கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் சில சமயம் தான் தாயாரிடம் "அப்பா எப்போது அம்மா சிறையிலிருந்து வந்து என்னைப் பார்க்க வருவார்" என்று அடிக்கடிக் கேட்பார்.

இந்திரா டெல்லியில் உள்ள ஒரு கிண்டர் கார்டன் பள்ளியில் முதலில் சேர்க்கப்பட்டார். பின்னர் அலகாபாத்திலுள்ள ஒரு கான்வென்ட் பள்ளி, ஒரு போர்டிங் ஸ்கூல் இப்படிப் பல பள்ளிகளில் பயின்றார்.

வீட்டில் ஒரு பெரிய லைப்ரரி இருந்தது. அதில் ஏராளமான நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

தாத்தாவினுடைய சட்டப் புத்தகங்களைத் தவிர, வீட்டிலுள்ள—அனேகமாக—எல்லா நூல்களையும் எடுத்து இந்திரா விடாமல் படித்து விடுவார். சில சமயம் தாத்தாவிடம் சென்று "நான் ஜோன் ஆஃப் ஆர்க்கைப்போல் வீரமுடன் வாழ்வேன்" என்று கூறுவார்.

இந்திராவுக்கு பொம்மைகள் என்றால் மிகவும் பிரியம். இதற்காகவே தாத்தா பல பல வண்ணங்களில் மிக அழகான பொம்மைகளை பேத்திக்கு கூடை கூடையாக வாங்கிக் கொடுத்திருந்தார்.

ஆனால் அவற்றிலிருந்து இந்திரா சிப்பாய் பொம்மைகளையும், பீரங்கி வண்டி, யானை, குதிரை போன்றவற்றை மட்டுமே எடுத்து வைத்துக்கொண்டு விளையாடுவார்.

திடீரென்று கமலா நேருவின் உடல் நிலை சீர் கெட்டது. மனைவியை சிகிச்சைக்காக ஸ்விட்சர் லாந்திற்கு அழைத்துச் சென்ற நேரு இந்திராவை யும் உடன் அழைத்துச் சென்றார்.

அநத நாட்டின் அழகிய மலைச் சிகரங்களும் அழகிய ஏரி குளங்களும் இந்திராவை வெகுவாகக் கவர்ந்தன.

அப்போது இந்திராவுக்கு வயது பத்து. தந்தை யுடன் இந்திரா லண்டன், பாரீஸ், பெர்லின் போன்ற நகரங்களுக்கும் சென்று சுற்றிப் பார்த் தார்.

பல அரசியல் தலைவர்களையும். புரட்சி வீரர் களையும், எழுத்தாளர்களையும், பத்திரிகையாளர் களையும், விஞ்ஞானிகளையும், ஓவியர்களையும், பல இடங்களுக்கும் தந்தையுடன் சென்று சந்தித் தார்.

அவர்கள் தன் தந்தையிடம் கொண்டிருக்கும், அன்பையும், மதிப்பையும், நட்புறவையும் எண்ணி இந்திரா மகிழ்வார்.

இந்திராவிற்கு பதிமூன்று வயது. தந்தை நைனி சிறையிலிருந்தார் இங்கிருந்து தமது அருமை மகள் இந்திராவிற்கு தொடர்ந்து கடிதங்களை எழுதி வந்தார்.

அந்தக் கடிதங்கள் மிகப் பிரபலமானவை.

நேருஜி மகளுக்கு எழுதும் கடிதம், குடும்ப விஷமத்தைவிட்டு; நாட்டு விஷயங்களைப் பற்றியே விளக்கி எழுதுவார். ஆங்காங்கே தமது கருத்துக்களையும் அதில் எழுதுவார்.

தந்தையிடமிருந்து வந்த கடிதங்களை தொடர்த்து படித்து வந்த இந்திராவுக்கு, இந்திய அரசியலைப் பற்றி நன்கு புரிந்தது, மட்டுமல்ல அதில் ஆர்வமும் ஏற்பட்டது.

இந்த சமயத்தில் மோதிலால் நேரு இறந்தார். இந்திரா அனுபவித்த முதல் மரணத்துக்கம் இது தான்.

இந்திரா பள்ளியில் படித்தாலும், அரசியல் போராட்டங்களிலும், கவனம் செலுத்தி வந்தார்.

அப்போது மகாத்மா காந்தி உண்ணாவிரதம் இருந்தார். அப்போது இந்திரா எரவாடா சிறைக்குச் சென்று காந்திஜியைக் கண்டு வந்தார்.

கவியரசர் ரவீந்திரநாத் தாகூரின் சாந்தி நிகேதன் பள்ளியில் சேர்ந்து இந்திரா சில காலம் தனது பள்ளிப் படிப்பைத் தொடர்ந்தார்.

இதன் மூலம் கவியரசர் தாகூருடன் பழகும் வாய்ப்பு இந்திராவிற்குக் கிட்டியது.

சாந்திநிகேதன் கல்வி முறையும்; ஆசிரம பழக்க வழக்கங்களும் இந்திராவை வெகுவாகக் கவர்ந்தன.

பெரிய செல்வந்தர் வீட்டில் பிறந்தவ ரானாலும், இந்திரா என்றுமே எளிமையாக இருக்கவே ஆசைப்படுவார்.

அவர் விரும்பும் எளிமை அந்த ஆசிரமம் முழு வதும்; பள்ளி முழுவதும் இருந்தது.

ஒவ்வொருவரும் தங்கிப் படிப்பதற்கு படா டோபமில்லா சிறிய குடிசைகள்.

மரநிழலில் நடைபெறும் பள்ளி வகுப்புகள், ஆசிரமத்திலும், பள்ளியிலும் உள்ளவர்களின் எளிமையான வாழ்க்கையும், இனிய சுபாவமும் இந்திராவின் மனதிற்கு மிகவும் இதமாக இருந்தன.

கல்வியும், கலையும் கைகோர்த்துவாழும் சாந்திநிகேதன வாழ்க்கை இந்திராவிற்கு மிகவும் பிடித்திருந்தது.

விடுதியில் பணியாளர்களே கிடையாது. பெருக்குவது, மொழுகுவது, சுத்தம் செய்வது, சமையல் செய்வது, உணவு பரிமாறுவது போன்ற அனைத்துப் பணிகளையும் மாணவிகளே செய்து கொள்ளவேண்டும்.

எவ்வளவுக்கு அங்கு சுதந்திரமும், இன்பமும், சந்தோஷமும் நிலவியதோ அத்தனைக்கு கண்டிப்பும் கெடுபிடிகளும் தாராளமாக உண்டு.

இது இந்திராவுக்கு காந்திஜியின் ஆசிரமத்தையே நினைவுபடுத்தியது.

அன்று—

வங்காளிகளின் புது வருஷப் பிறப்பு கொண்டாட்ட தினம். சாந்திநிகேதன் விழாக்கோலம் பூண்டு காட்சியளித்தது.

மாணவிகள் அனைவரும் மாலைகளினாலும், மாவிலைத் தோரணங்களினாலும் சாந்திநிகேதனுக்கு மேலும் அழ கூட்டிக்கொண்டிருந்தனர்.

அப்போது நேருஜியிடமிருந்து தந்தி ஒன்று வந்தது.

அதில், "கமலாவின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது; அதனால் உடனே இந்திராவை அலகாபாத்துக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறேன்" என்று தாகூருக்கு நேருஜி எழுதியிருந்தார்.

இந்திரா குருதேவரிடம் விடைபெற்றுக் கொண்டு உடனே புறப்பட்டார்.

"வழித்துணைக்கு யாரையாவது அனுப்பட்டுமா?" என்று குருஜி கேட்டார்.

"வேண்டாம்; நான் ஜாக்கிரதையாய்ப் போய் விடுகிறேன்" என்று இந்திரா கூறி விடைபெற்று தனியே வந்து விட்டார்.

கமலாவின் உடல் நிலையை அடிக்கடி டாக்டர்கள் வந்து பரிசோதித்தனர் சுவாசப்பை மிகவும் பலகீனமடைந்து, நோய் அதிகமாகிக் கொண்டே இருந்தது.

இந்திரா இரவும் பகலும் அன்னையின் அருகிலேயே இருந்து வேண்டிய உதவிகள் செய்தார். தாய்க்கு அடிக்கடி ஆறுதல் கூறினார்.

டாக்டரின் ஆலோசனைப்படி கமலாவின் சிகிச்சைக்காக நேரு, தன் மகளுடன் ஜெர்மனி சென்றார்,

அங்குள்ள சிறந்த மருத்துவமனையில் கமலா சிகிச்சை பெற்று வந்தார்.

துயரமும், கவலையும் நிறைந்த அந்த நாட்களில் இந்திராவிற்கு துணையாகவும் ஆறுதலாகவும் இருந்தவர் பெரோஸ் காந்திதான்.

பெரோஸ் காந்தியை இந்திராவிற்கு சிறு வயதிலிருந்தே தெரியும்; இருவரும் நண்பர்கள்.

அப்போது பெரோஸ் காந்தி லண்டனில் ஒரு பள்ளியில் பொருளாதாரம் படித்து வந்தார். கமலா அத்தை உடல் சிகிச்சைக்காக ஜெர்மனி வந்திருப்பது அறிந்து அடிக்கடி ரயிலில் வந்து வேண்டிய உதவி செய்து விட்டுப் போவார்,

கமலா நேருவிற்கு பெரோஸ் காந்தியை மிகவும் பிடித்திருந்தது.

பெரோஸ் காந்தி விடுதலைப் போரில் ஆர்வம் கொண்டவர்.

அதேபோல் அவர் நேரு குடும்பத்தினர் மீதும் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்தார்.

தாய்க்கு உதவ அவர் வந்து போவதை இந்திராவும் விரும்பினார் என்றே சொல்ல வேண்டும்.

கமலாவின் உடல்நிலை மேலும் மோசமாகியது. நேருவிற்கு தந்தி கொடுக்கப்பட்டது.

உடனே சிறையில் இருந்த அவரை உத்திர பிரதேச சர்க்கார் விடுதலை செய்து அனுப்பி வைத்தது.

அவர் மனைவியைக் காண விமானத்தில் வந்து சேர்ந்தார். அப்போது பெரோஸ் காந்தியும் அங்கு இருந்தார்.

ஜெர்மனியிலிருந்து கமலா மீண்டும் சுவிட்சர் லாந்து மருத்துவமனைக்கே மாற்றப்பட்டார் ஆனால் அங்கு மருத்துவர்களால், கமலாவின் வியாதியைக் குணப்படுத்த இயலவில்லை.

இறுதியில் 28 2. 1936-ல் கமலா நேருவின் ஆவி பிரிந்தது.

இந்திராவின் கண்கள் அழுது சிவந்தன. தாங்க முடியாத துயரத்தில் ஆழ்ந்தார். இனி அவருக்கு ஒரே துணை தந்தை தான்.

நேரு தமது மகளைத் தொடர்ந்து படிக்க லண்டனில் ஒரு பள்ளியில் சேர்ந்தார். இந்திரா வும், குஜராத்தைச் சேர்ந்த சாந்தாகாந்தி என்னும் மாணவரும் அப்போது லண்டனில் ஒரே அறையில் தங்கிப் படித்தனர்.

கமலாவின் மரணத்துடன் நேருவுக்கு சொந்த வாழ்க்கை என்பதே இல்லாமல் போய் விட்டது. அவர் நாட்டுக்கு உடமையாகி விட்டார். நாட்டின் லட்சியத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

**திருமணம்**

இந்திராவும், பெரோஸ் காந்தியும் ஒருவரை ஒருவர் விரும்புவதை அறிந்த நேரு அவர்களுக்கு திருமணம் செய்து வைக்க எண்ணினார். ஆனால் குடும்பத்தில் சிலர் இதற்கு சம்மதிக்கவில்லை

காரணம் பெரோஸ் காந்தி பார்ஸி மதத்தைச் சேர்ந்தவர் என்பது தான்.

தன் மகள் இந்திராவின் விருப்பத்தை நன்கு அறிந்த நேரு, எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாது அவர்களது திருமணத்தை நடத்தி வைத்தார்.

இந்திராவும் பெரோஸ் காந்தியும் தங்களது புதுக் குடித்தன வாழ்க்கையை லக்னோவில் ஆரம்பித்தனர்.

## வெள்ளையனே வெளியேறு

1942 ஆகஸ்ட் 8-ம் தேதி இந்திராவும், பெரோஸ்காந்தியும் பம்பாயில் நடைபெற்ற சரித்திரப் புகழ் வாய்ந்த அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்திற்குச் சென்றிருந்தனர். அந்த மகா நாட்டில்தான் "வெள்ளையனே வெளியேறு" தீர்மானம் நிறைவேறியது.

எல்லாத் தலைவர்களும் கைது செய்யப் பட்டனர். விடியற்காலை. தந்தையைக் கைது செய்ய போலீஸ் வந்த போது, இந்திரா அவருடைய பெட்டி படுக்கைகளைக் கட்டிக் கொடுத்து அனுப்பி வைத்தார்.

ஆகஸ்ட் இயக்கத்தில் தீவிர பங்கு கொண்டவராதலால் பெரோஸ் காந்தி மீதும் ஒரு வாரண்ட் இருந்தது. பெரும்பாலான காங்கிரஸ்காரர்களைப்

போலவே பெரோஸ் காந்தியும் தலைமறைவாகி விட்டார்.

இரவும் பகலும் போலீஸ் அந்த வீட்டைச் சுற்றி காவல் இருந்தது. இந்திரா அங்கிருந்து அலகாபாதுக்கு வந்து விட்டார்.

பின்னர்—

ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியதற்காக பெரோஸ் காந்தி நைனி சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இந்திராவும், அவருடன் கைதான ஐந்து பெண்மணிகளும் அருகில் இருந்த 'பெண்கள் சிறையில்' அடைக்கப்பட்டனர்.

நேருஜி அகமத் நகர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டார்.

ஒன்பது மாதங்களுக்குப் பின்பு 13-5-1943-ல் இந்திரா விடுதலை செய்யப்பட்டார்.

1944-ல் இந்திரா காந்தி ராஜீவ் காந்தியைப் பெற்றெடுத்தார்; அடுத்து 1946-ல் சஞ்சய் காந்தி பிறந்தார்.

15-8-1947 அன்று இந்தியா சுதந்திரமடைந்தது. பண்டித நேரு முதல் பிரதமராகப் பதவி ஏற்றார். நாடு முழுவதும் மகிழ்ச்சி பொங்கியது ஆனால் அந்த சுதந்திரத்தை ஆங்கிலேயர்கள் முழுமையாக அனுபவிக்க விடவில்லை. நாட்டை

இரண்டாகப் பிரித்து, ஒரு பகுதியை பாகிஸ்தானுக்குக் கொடுத்து விட்டனர்.

அதைத் தொடர்ந்து இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் வகுப்புக் கலவரங்கள் தலைவிரித்தாடின.

பாகிஸ்தானிலிருந்து அகதிகள் கூட்டம் கூட்டமாக வந்ததன் காரணமாக டெல்லியிலும் கலவரங்கள் பரவின.

மதவெறியையும், வகுப்புக் கலவரங்களையும் கண்டு மகாத்மாவின் ஆத்மா வேதனைக்குள்ளாயிற்று.

இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்குமிடையே நல்லெண்ணமும், நல்லுறவும் நிலவ தினமும் பிரார்த்தனைக் கூட்டங்களின் போது மகாத்மா காந்தி மனமுருகி கேட்டுக் கொண்டார்.

பிரதமர் நேரு சிறுபான்மையினரின் உயிரைக் காக்கவும், டெல்லியில் அமைதி நிலவச் செய்யவும் தம் உயிரையும் மதியாது செயலில் இறங்கினார். கலவரங்கள் நடக்கும் இடங்களுக்கு பாதுகாப்பின்றி பாய்ந்து ஓடினார்.

தன் இரு குழந்தைகளுடன் தந்தையோடு வசித்து வரும் இந்திரா; தந்தையின் உயிருக்கு ஆபத்து ஏதும் நேர்ந்துவிடக் கூடாதே என்று மிகவும் கவலையுடன் இருந்தார்.

தந்தையின் அருகிலேயே இருந்து அவரைக் கண்ணும் கருத்துமாகக் காக்க வேண்டிய பொறுப்பு இந்திராவுக்கு இருந்தது. அது மட்டுமல்ல; ஒரு வயதே நிரம்பியிருந்த அவரது இரண்டாவது மகன் சஞ்சயைக் கவனித்துக் கொள்ள வேண்டிய கடமையும் இருந்தது.

இந்திராகாந்தி ஒரு ஜீப்பில் ஏறி அகதிகள் முகாம்களுக்குச் சென்று அவர்களுடைய குறைகளைப் போக்கினார். ஏழை மக்களின் துயரத்தை முதன் முறையாக இந்திரா நேரில் கண்டார்.

1947-ம் ஆண்டில் ஜவஹர்லால் நேருவுடன் இந்திரா டில்லியில் 'யார்க் ரோடி'லுள்ள ஒரு பங்களாவில் குடியேறினார். பின்னர் தீன் மூர்த்தி பவனுக்கு மாறினார்.

இந்திரா தந்தைக்கு உதவியாக இருந்து கொண்டே அரசியலை கூர்ந்து கவனித்து வந்தார். பிற்காலத்தில் அவருடைய, அரசியல் வாழ்வுக்கு அது அஸ்திவாரமாக அமைந்தது.

உலக நாடுகளின் அழைப்பை ஏற்று நேரு வெளிநாடுகளுக்குச் செல்லும் போதெல்லாம்; கூடவே இந்திராவும் சென்றார்.

இப்படிப் பல நாடுகளுக்கும் தந்தையுடன் சென்று வந்த இந்திரா காந்தி உலகத் தலைவர்கள் பலரை அறிந்திருந்தார். மேலும் பல நாட்டுத் தலைவர்களும் தீன் மூர்த்தி பவனுக்கு வருகை

தரும் போது எல்லாம் அவர்களை வரவேற்க வேண்டிய பொறுப்பு இந்திராவிடம் இருந்தது. இதனால் இந்திரா காந்தி அகில உலக அளவில் பலராலும் அறியப்பட்டவரானார்.

சில வருஷங்கள் பெரோஸ் காந்தி தன் மனைவி குழந்தைகளுடன் பிரதம மந்திரி இல்லத்திலேயே வசித்து வந்தார்.

பெரோஸ் காந்தி பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவுடன் எம்.பிக்களுக்காக அளிக்கப்பட்ட தனி வீட்டில் வசிக்கலானார். குழந்தைகள் இருவரும் விடுதியில் தங்கி படித்து வந்தனர்.

நேரம் கிடைத்த போதெல்லாம் இந்திரா குழந்தைகளுடன் கணவனைச் சென்று பார்த்து வருவார்.

1959-ல் இந்திரா காந்தி காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அந்தப் பதவிக்கு இவர் நான்காவது பெண் மணி இதற்கு முன் அன்னிபெஸண்ட், சரோஜினி தேவி, நெல்லி சென் குப்தா, ஆகிய மூவரும் அப் பதவியை வகித்த பெண்மணிகளாவார்.

இதற்கு முன் இவர்கள் குடும்பத்தில் மோதிலால் நேருவும், ஜவஹர்லால் நேருவும்

காங்கிரஸ் தலைவர்களாகப் பதவி வகித்து வந்துள்ளனர்.

இந்திரா காந்தி காங்கிரஸின் தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்ட போது, கேரளாவைத் தவிர மற்ற மாநிலங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகளே ஆட்சியில் இருந்தன.

இவருடைய ஆட்சிக் காலத்தில் கேரளாவில் ஜனாதிபதி ஆட்சி ஏற்பட்டது. பம்பாய் மாநிலம்— மகாராஷ்டிரா, குஜராத் என இரு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன.

## சீனப் போர்

திபேத்திலிருந்து தலாய் லாமா இந்தியா ஓடி வந்தார். அது சீனப் போராக உருவெடுத்தது. நட்பு நாடான சீனாவின் ஆக்கிரமிப்பு நேருவின் மனதை வேதனையில் ஆழ்த்தியது. ஆயினும் இந்தியாவின் தன் மானத்தைக் காக்க சீனாவுடன் போரிட இந்தியா தயாராகி விட்டது.

## பெரோஸ் காந்தி மரணம்

1960-ல் இரண்டாவது முறையாக இதய வலி ஏற்பட்டு பெரோஸ் காந்தி இறந்தார்.

கணவரது பிரிவு இந்திரா காந்தியை பெரிதும் வருத்தியது. சிறிது காலம் பிரமை பிடித்தவர் போல் தனிமையில் வாடினார்.

## நேருவின் கடைசி நாட்கள்

1964-ம் ஆண்டு புவனேஸ்வர் காங்கிரஸ் மகாநாட்டில் நேரு திடீரென்று மயக்க முற்று விழுந்தார்.

பாரிச வாயுவினால் பாதிக்கப்பட்ட நேரு நான்கு மாதங்கள் மிகுந்த சிரமப்பட்டார். இந்திரா காந்தி கண்ணும் கருத்துமாய்த் தந்தையைக் கவனித்து வந்தார் எனினும் 27-5-1964 அன்று நேருஜி மரணமடைந்தார்.

## லால்பகதூர் சாஸ்திரி

நேருவிற்குப் பின் லால்பகதூர் சாஸ்திரி பிரதமர் பதவி ஏற்றார். இந்திரா அந்த மந்திரி சபையில் தகவல் ஒலிபரப்பு அமைச்சராகப் பதவி ஏற்றார். அவர் செய்தித்துறை பொறுப்பு வகித்த போதுதான் எதிர்காலத்தில் வானொலி, தொலைக் காட்சி அமைப்புக்கள் எவ்வாறு இருக்கவேண்டும் என்று அவற்றிற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தார்.

1965-ல் பாகிஸ்தான் படைவீரர்கள் காஷ்மீரில் ஊடுருவல் செய்தனர். இந்திரா ஸ்ரீநகருக்கு பறந்து சென்று ஜவான்களுடன் உரையாடினார்.

ஊடுருவல்—போராகிய போது; இந்திரா போர் முனைக்கே சென்றார். இறுதியில் போர் நிறுத்தம் ஏற்பட்டது.

பாகிஸ்தானுடன் தாஷ்கண்ட் ஒப்பந்தத்திற்கு ரஷியா சென்ற லால்பகதூர் சாஸ்திரி ரஷியாவில் மாரடைப்பால் இறந்தார். இதனை அடுத்து,

**இந்திரா பிரதமர்**

25-11-66 அன்று இந்திரா காந்தி பாரதப் பிரதமராகப் பொறுப் பேற்றார்.

16 ஆண்டுகாலம் பிரதமர் பதவியை இந்திரா வகித்தார். இந்த இடைப்பட்ட காலத்தில் இந்திரா காந்தி நாட்டு மக்களுக்காக 20 அம்சத் திட்டம் போன்ற பல பொருளாதார வளர்ச்சித் திட்டங் களைத் தீட்டி ஏழை மக்களுக்கு எண்ணற்ற நன்மைகள் செய்திருக்கிறார்.

தேசிய உடமையாக்கியதன் மூலம்; வங்கிக் கதவுகளை ஏழை மக்களுக்குத் திறந்து விட்டார்.

மக்கள் அவரை மிகுந்த நன்றியோடும் மரியாதையோடும் ஏற்றுக் கொண்டிருந்த வேளை யில் 30-10-84 புதன்கிழமை காலை 9 மணிக்கு இந்திராகாந்தி அவருடைய இரண்டு சீக்கிய மெய்க் காவலர்களால் அவரது இல்லத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்திய வானில் தொடர்ந்து ஒளிவீசிக் கொண்டிருந்த நம்பிக்கை நட்சத்திரம் மண்ணில் ரத்த வெள்ளத்தில் வீழ்ந்து விட்டது.

# ராஜீவ்காந்தி

## (1944—1991)

**"நவீன இந்தியாவை உருவாக்க வேண்டும் என்பது என் அடங்காத ஆவல். பெருகிவரும் தலைமுறையினர் நம்பிக்கை கொள்ளும் வகையில் புதிய பொருளாதாரக் கொள்கைகள், குறைந்த கட்டுப்பாடுகளுடன் கம்ப்யூட்டர்கள், நவீன இயந்திரங்கள் ஆகியவை தாராளமாக்கப்பட வேண்டும்."**

**—ராஜீவ் காந்தி**

இரண்டாவது உலகப் போர் தீவிரமாக நடந்து கொண்டிருந்த நேரம். 1944-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20ம் தேதி பம்பாயில் இந்திரா காந்திக்கும், பெரோஸ் காந்திக்கும் மூத்த மகனாகப் பிறந்தார்.

அருமையாகப் பேரன் பிறந்து விட்டான். ஆனால் அந்த மகிழ்ச்சியைக் குடும்பத்தாருடன் சேர்ந்து கொண்டாட, தாத்தாவான ஜவஹர்லால்

நேரு அங்கில்லை. ராஜீவ் பிறந்தபோது நேரு சிறையில் இருந்தார்.

இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் தீவிர மாக நடந்து கொண்டிருந்தது. "வெள்ளையேன வெளியேறு" போராட்டத்தை மகாத்மா காந்தி தீவிரமாக நடத்திக் கொண்டு இருந்தார்.

சிறையில் இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு விற்கு பேரன் பிறந்த மகிழ்ச்சிகரமான செய்தி தெரிவிக்கப்பட்டது. அவர் உடனே ராஜீவ் பிறந்த தைப் பற்றித் தன் மகள் இந்திராகாந்திக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில், "நாற்பது கோடி இந்தியரில் முதல் இந்தியர்" என்று எழுதியிருந் தார்.

குழந்தை பிறந்த 11-ம் நாள் பெயர் சூட்டு விழா விமரிசையாக நடைபெற்றது. உறவினர் களும், நண்பர்களும், குழந்தையின் கொள்ளை அழகைப் பார்த்து வியந்து பாராட்டினர்.

அன்று அலர்ந்த ரோஜா மலர் போல் சிவந்த பட்டுப் போன்ற உடலும்; சிரிக்கும் கண் களும் அனைவரையும் கவர்ந்தன. ஆனால் அந்த மகிழ்ச்சியைத் தங்களுடன் சேர்ந்து அனுபவிக்க தன் தந்தை அங்கு இல்லாதது இந்திராகாந்தியின் மனதை வருத்தியது.

ஆயினும் விரைவிலேயே மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டு விட்டார். ஆம்! நாட்டு

விடுதலைக்காக தியாகம் புரித்து வரும் பரம்பரையில் பிறந்தவரல்லவா அவரும்!

## பிள்ளைப் பருவமும்; பள்ளிப் பருவமும்

ராஜீவ் காந்தி மற்ற குழந்தைகளைப் போல் எல்லோருடனும் வலியச் சென்று பேசி சகஜமாகப் பழகும் இயல்பு இல்லாதவர். ஆனால் அதற்குக் காரணம் கர்வம் அல்ல. கர்வம் என்றால் என்ன என்று கூட ராஜீவ் காந்திக்கு இறுதிவரைத் தெரியாது! ஆனால் அளவிற்கு மீறிய கூச்ச சுபாவம் உடையவர். பிறரிடம் மிகுந்த மரியாதை செலுத்தக் கூடியவர். பள்ளிப் பருவத்திலிருந்து பெரிய தலைவர் ஆன பிறகும் கூட அவர் அப்படித் தான் இருந்தார்.

எப்போதும் மென்மையான குரலில் சுருக்கமாகத்தான் பேசுவர். சிரித்த முகமும், யாரிடமும் கோபமோ; துவேஷமோ கொள்ளாத இயல்பும் உடையவர்.

ராஜீவ்காந்தி தன்னுடைய ஆறாவது வயதில் 1950-ல் டூன் பள்ளியில் சேர்க்கப்பட்டார். பத்தாண்டுகள் அந்தப் பள்ளியில் படித்தார். அங்கு அவர் எழுதும் தேர்வுகளில் சுமாரான மார்க்குகளே எடுப்பார். பேச்சில், நடத்தையில், புத்திசாலித்தனம் கொண்ட ராஜீவ் காந்தி தேர்வுகளில் குறைந்த மதிப்பெண்கள் எடுப்பது ஆசிரியர்களுக்கே வியப்பாயிருக்கும்.

**தந்தை மரணம்**

ராஜீவ் காந்தியின் 16-வது வயதில் அவரது தந்தை பெரோஸ் காந்தி காலமானார். தாயாருக்கு ஆறுதலாக சிலநாட்கள் இருந்த ராஜீவ் காந்தி மேல்படிப்புக்காக லண்டன் சென்று அங்குள்ள இம்பீரியல் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு, அவர், மெக்கானிக்கல் இஞ்சினியரிங் பாடம் எடுத்துப் படித்தார். பிறகு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்தார்.

லண்டனில் ராஜீவ் காந்தி தன்னுடைய படிப்பு நேரம் போக, மற்ற நேரங்களில் பகுதி நேர வேலை பார்த்து வந்தார். தனக்கென்று தனியாக எந்த வசதியும் செய்து கொள்ளாமல், உடன் படிக்கும் மாணவர்களுடன் சேர்ந்து ஒரே அறையில் தங்கி இருந்து அவர் படித்தார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலுள்ள கிரேக்க ரெஸ்டாரண்டில் ஒருநாள் ராஜீவ் காந்தி முதன்முதலாக சோனியாமைனோவைச் சந்தித்தார். இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். ஸ்பெயின் நாட்டு மொழியில் தேர்ச்சி பெற கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்து வந்தார்.

சோனியாவைப் பார்த்த உடனேயே ராஜீவ் காந்தி, "இவள்தான் எனக்கு மனைவியாக வர வேண்டும்" என்று உள்ளூர விரும்பினார்.

சோனியாவும், ராஜீவ் காந்தியிடம் மிகவும் அன்பாகப் பழகினார். அதன் பிறகு அடிக்கடி ஏற்பட்ட சந்திப்புக்களின்போது இருவரும் மனம் விட்டு பேசி திருமணம் செய்து கொள்ளுகிற ஒரு முடிவிற்கு வந்தனர்.

அதன் பிறகு ராஜீவ் காந்தி தன் தாயார் இந்திரா காந்திக்கு ஒரு கடிதம் எழுதி, "நான் மணந்து கொள்ள விரும்பும் பெண்ணை தாங்கள் வந்து பார்க்க வேண்டும்" என்று கேட்டிருந்தார்

லண்டனில் அப்போது நேருவைப் பற்றிய ஒரு கண்காட்சி நடந்து கொண்டிருந்தது. அதைத் திறந்து வைக்க லண்டன் வந்திருந்த இந்திரா காந்தி இந்திய தூதரகத்தில் தங்கி இருந்தார்.

இந்திரா காந்தி தன் மகனுக்கு பதில் கடிதம் எழுதி, அதில், அந்தப் பெண்ணையும் அழைத்துக் கொண்டு தன்னிடம் வரும்படிக் கூறியிருந்தார்.

ராஜீவ் காந்தி சோனியாவையும் அழைத்துக் கொண்டு தாயாரிடம் சென்றார்.

இந்திரா காந்தியைக் கண்டதும், சோனியாவின் மனதில் ஒருவித நடுக்கமும்; பயமும் ஏற்பட்டது. அதைக் கவனித்த இந்திரா காந்தி, சோனியாவை தன் அருகில் அழைத்து, "பயப்படாதே; உங்கள் திருமணத்திற்கு நான் மறுப்பு ஏதும் சொல்ல மாட்டேன், நானும் உன்னைப்

போல இளம் பெண்ணாக இருந்தபோது வேறு மதத்தைச் சேர்ந்தவரை விரும்பி மணந்து கொண்டேன், கவலைப்படாதே" என்று ஆறுதலாகக் கூறினார்.

## திருமணம்

ராஜீவ் காந்தி சோனியா திருமணம் 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடந்தது. இத்தாலிய நாட்டைச் சேர்ந்தவராயினும் திருமணமாகி கணவருடன் இந்தியா வந்த பிறகு சோனியா இந்தியாவையும் தன் தாய்நாட்டைப் போலவே மதித்தார், நேசித்தார்.

அழகாகவும், மிகவும் அடக்கமாகவும், எல்லோரிடமும் இனிமையாகவும், பண்புடனும் நடந்து கொள்கிற சோனியாவின் குணம் குடும்பத்தில் எல்லோருக்குமே மிகவும் பிடித்து விட்டது.

ராஜீவ் காந்தியைவிட, சோனியா காந்தி கூச்சம் நிறைந்தவர். அரசியலில் முழுக்க முழுக்க ஈடுபட்டுள்ள ஒரு குடும்பத்துக்கு மருமகளாக வந்து விட்டபோதிலும்; சோனியா காந்தி பகட்டான அரசியலையும், விளம்பரத்தையும் அறவேவெறுத்தவர். ஒரு தாயாகவும்; கணவனுக்கேற்ற ஒரு நல்ல மனைவியாகவும் மட்டுமே வாழ ஆசைப்பட்டார். அவருக்கு எவ்வித பேராசைகளும் இருந்ததில்லை.

ராஜீவ்காந்தி ஒரு சிறந்த மெக்கானிக்காகப் பயிற்சி பெற்றவர்; கம்ப்யூட்டர் நிபுணர், சிறந்த சவுண்ட் இஞ்சினியரும் கூட; எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு விமானம் ஓட்டியாக மாதம் 5,000 ரூபாய் சம்பாதித்து வந்தார்.

இந்த வாழ்க்கையையே போதும் என்று ராஜீவும், சோனியாவும் மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தனர்.

ராஜீவ் காந்தி குடும்பத்துடன் மிகவும் ஒட்டுதல் மிகுந்த மனிதர். அம்மாவைப் போலவோ, அல்லது தாத்தாவைப் போலவோ அரசியல் வாதியாக விளங்க வேண்டும் என்று அவர் ஒரு போதும் நினைத்துக் கூட பார்த்ததில்லை. அதிலும் பிரதமர் ஆக வேண்டும் என்று கனவில் கூட எண்ணியதில்லை. சோனியா காந்தியும் ராஜீவ் காந்தியைப் போன்ற கருத்தையே கொண்டிருந்தார்.

ராஜீவ் சோனியா தம்பதிகளுக்கு ராகுல், பிரியங்கா என்ற இரு குழந்தைகள் பிறந்தன.

தனக்கு மிகவும் பிரியமான ராகுல் பிரியங்கா ஆகிய இரு குழந்தைகளுடனும், கணவருடனும் அவர் வீட்டோடு இருக்கவே ஆசைப்பட்டார்.

அரசியலைப் பற்றி எப்போதாவது பேச்சு எழுந்தால் கூட "நான் ஒரு போழுதும் அரசியலில்

நுழைய மாட்டேன்,'' என்று ராஜீவ் காந்தி சோனியாவிடம் வாக்குறுதி அளித்திருந்தார்.

இத்த அளவிற்கு சோனியா காந்தி அரசியலை வெறுப்பவர் என்று அறிந்திருந்ததினாலேயே, இந்திரா காத்தி ஒரு பேட்டியின் போது, "ராஜீவ் அரசியலில் ஈடுபட்டால், என் மருமகள் ராஜீவை விவாகரத்துச் செய்து விடுவார்' என்று பகிரங்க மாகக் கூறினார்.

இப்படியெல்லாம் இருந்தும் கூட சூழ்நிலையும் சந்தர்ப்பமும், எப்படியோ ராஜீவ் காந்தியை அரசியலுக்கு இழுத்து விட்டன.

அதைத் தவிர வேறு வழியே இல்லை என்பதை அனைவரோடும் சேர்ந்து சோனியாவும் ஒப்புக் கொள்ள வேண்டிய தாயிற்று.

**சஞ்சய் காந்தி மரணம்**

ராஜீவ் காந்தியின் சகோதரர், சஞ்சய் காந்தி 1980-ஜூன் மாதம் ஒரு விமான விபத்தில் உயிர் துறந்தார். உத்திரபிரதேச மாநிலத்திலுள்ள அமேதி தொகுதியில் மறு தேர்தல் நடத்த வேண் டிய தாயிற்று.

அது வரை தன் விருப்பப்படி தன் குடும்பத் துடன் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்த

ராஜீவின் மீது கட்சித் தலைவர்களின் பார்வை திரும்பியது.

அம்மாவிற்கு வாரிசாக வந்திருக்க வேண்டிய சஞ்சய் இறந்து விட்டார்; இனி அந்த வெற்று இடத்தை நிரப்பவும்; தாயாருக்கு உதவியாகவும் ராஜீவ் காந்தி அரசியலுக்கு வரவேண்டும் என அனைவரும் வற்புறுத்தினர். ராஜீவால் அவற்றை மீள முடியவில்லை.

இதைக் கேள்விப்பட்ட சோனியா காந்தி தனது அறைக்குள் புகுந்து கொண்டு நான்கு நாட்கள் அழுதார். தனக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் படிக் கெஞ்சினார்.

அதே போன்று இந்திரா காந்தியும், "ராஜீவ் நீ அரசியலில், இறங்கியே ஆக வேண்டும்; வேறு யாரையும் நம்ப முடியாது" என்று கண்ணீர் மல்க வற்புறுத்தினார்.

இறுதியில் ராஜீவ் மனைவியை சமாதானப் படுத்தி விட்டு, தாயின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார், அதன் பிறகு ராஜீவ் காந்தி அமேதி தொகுதியில் போட்டியிட்டு ஜெயித்தார். 1981-ம் ஆண்டு தனது 36-வது வயதில் ராஜீவ் காந்தி பார்லிமெண்ட் உறுப்பினர் (எம். பி) ஆனார் பிறகு இ, காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாள ராக நியமிக்கப்பட்டார். பின்னர் படிப்படியாக ராஜீவ் காந்தி இந்திரா காந்தியின் வாரிசாக அரசி

யலில் வளர்ந்து வந்தார். இந்த சந்தர்ப்பத்தில் நாட்டுக்கு ஒரு சோதனை காலம் ஏற்பட்டது.

## இந்திராகாந்தி சுட்டுக் கொலை

பஞ்சாபில் தீவிரவாதிகள், மதப்பூசலைக் கிளப்பி தனி நாடு கேட்டு அப்பாவி மக்களைக் கொன்று குவித்துக் கொண்டிருந்தனர். இந்திரா காந்தி மிகுந்த துணிச்சலுடையவராய் பஞ்சாப் பிரச்சினையில் ஈடுபட்டார்.

அமிர்தசரஸ் பொற் கோயிலை ஆக்கிரமித்துக் கொண்டு; வன்முறையில் ஈடுபட்டுவரும், தீவிர வாதிகளை, ராணுவ நடவடிக்கை மூலம் அடக்கி ஒடுக்கினார்.

இதனால் மனம் குமுறியிருந்த தீவிரவாதி களின் சதித் திட்டத்தினால், இந்திரா காந்தி, அவரது வீட்டில் அவரது பாதுகாவலர்களாலேயே 1984-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் தேதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

## நெருக்கடி மிகுந்த நேரம்

சற்றும் எதிர்பாராத இந்திரா காந்தியின் மரணத்தின் மூலம் நாடு ஸ்தம்பித்துப் போனது. நாட்டின் தலைமைப் பதவியை உடனடி யார் ஏற்பார்கள் என்று குழம்பிக் கொண்டிருந்த நேரம்

நம்பிக்கை நட்சத்திரமாக அருகில் மின்னிக் கொண்டிருந்த ராஜீவ்காந்தியை; தற்காலிகப் பிரதமராக கட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுத் தார்கள். இடைக்கால பதவிதான் என்றாலும் ராஜீவின் தலைமையை நாடு நம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டது.

இதன் பிறகு இந்தியாவில் நடந்த பொதுத் தேர்தலின்போது 4-ல் 3 பங்கு மெஜாரிட்டியுடன் இ. காங்கிரஸ் வெற்றி பெற்றது. ராஜீவ் காந்தி பிரதமராகப் பதவி ஏற்றார். அப்போது அவருக்கு வயது 40தான். இந்திய அரசியலில் இவ்வளவு இளைஞராக யாரும் பிரதமர் பதவி வகித்த தில்லை.

ராஜீவ்காந்தி பிரதமர் பதவியை மிகுந்த பொறுப்புணர்வுடன் வகித்து வந்தார். ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்காக பல அரிய திட்டங்களை அவர் உருவாக்கினார். தொழில் முன்னேற்றத்திற்கும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கும் பாடுபட்டார்.

கிராமப்புற வளர்ச்சிக்கு வழிகோலும் திட்ட மாக 'பஞ்சாயத்து ராஜ்' சட்டத்தை கொண்டு வந்தார். 'அதிகாரங்கள் அனைத்தும் மக்களுக்கே,' என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

அதனாலேயே, 1989-ம் ஆண்டு தேர்தலில் மக்கள், தன் கட்சியைப் புறக்கணித்து தன்னை

பிரதமர் பதவியிலிருந்து நீக்கியபோதும், ராஜீவ் தன்னம்பிக்கையையும்; மக்களிடம் அவர் கொண்டுள்ள நம்பிக்கையையும் இழக்கவில்லை. மனம் தளராமல் மக்களை இடைவிடாமல் சந்தித்தார்.

அவர்களது குறைகளை கவனமாகக் கேட்டு அறிந்து கொண்டார். தன்னிடம் மக்கள் கண்ட குறையைப் போக்கிக் கொள்ள கடுமையாக உழைத்தார். மக்களை நம்பினார்.

1989 வரை ராஜீவ்காந்தி ஆட்சி செய்த ஐந்து வருடங்களும், நவீன இந்தியாவை உருவாக்குவதிலேயே அவர் முழுக்க முழுக்க கவனம் செலுத்தினார்.

21-ம் நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்ல நவீன இந்தியாவை உருவாக்கப் போவதைப் பற்றி அடிக்கடி பேசினார் அதன்படியே செயலாற்றவும் முனைந்தார்.

புதிய பொருளாதாரக் கொள்கைகள் மூலம் குறைந்த கட்டுப்பாடுகளுடன், கம்ப்யூட்டர்கள், நவீன யந்திரங்கள், ஆகியவற்றை தாராளமாக்கினார் கட்சித்தாவல் தடைச் சட்டத்தை அமலுக்கு கொண்டு வந்தார்.

பஞ்சாப், மிசோராம், அசாம் என்று அடுத்தடுத்து புதிய ஒப்பந்தங்களை மேற்கொண்டார். ராஜீவ்காந்தியின் அயல் நாடுகளுடனான உறவு

உலகையே பிரமிக்க வைத்தது. ரஷிய அதிபர் கோபர்சேவுடன் தனிப்பட்ட முறையில் நட்பை வளர்த்துக் கொண்டார். அதேசமயம், ரொனால்டு ரீகனுடன் கொண்ட நட்பின் மூலம், அமெரிக்கா வையும் கவர்ந்தார். தெற்கு ஆசிய நாடுகளுடன் மிகுந்த ஒத்துழைப்புக் காட்டினார்.

ராஜீவின் வேகம் நிறைந்த இந்த அடுக்கடுக் கான, செயல்களின் விளைவாக உலக அரங்கில் இந்தியாவின் புகழ், முன் எப்போதும் கண்டிராத அளவிற்கு திடீரென உயர்ந்துவிட்டது. இதற்கு மூலகாரணமாக அவருக்கு உதவியது; ராஜீவ்மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கையும்; அவருக்கு மக்கள் அளித்த பேராதரவும்தான்.

ஆனால் ராஜீவ்காந்தி என்றும் தனிமனிதன்— எத்தனை உயர்ந்த பண்பாளனாக இருந்தாலும்— அரசிரலுக்கு வந்தவிட்ட பிறகு-அவதூறுகளுக்கும் ஆளாக வேண்டியதுதான்.

தன்னைச் சார்ந்தவர்களின் சொல்லை ராஜீ வால் அலட்சியப்படுத்த இயலவில்லை. அவர்களது ஆலோசனைகளை புறக்கணிக்க முடியாத சூழ் நிலையில் ராஜீவ் சில தவறுகளை சந்திக்க நேரிட்டது.

பஞ்சாப் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட பிசகு, ஷாபானு வழக்கு; அதைவிட

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போன்று "போபர்ஸ் விவகாரம்" இது போன்ற குற்றச் சாட்டுகளினால் ராஜீவ் மனமுடைந்தார். கறை படாத கரம் படைத்தவர் ராஜீவ்காந்தி என்கிற பெயருக்கு நாலா திசைகளிலிருந்துப் களங்கம் கற்பிக்கப்பட்டது.

அதனைத் துடைத்தெறிந்து மீள்வதற்குள், 1989-ல் நடந்த தேர்தலில் ராஜீவ் காந்தி பதவி இழந்து தோல்வியைத் தழுவினார்.

ஆனால் இந்த இடைவெளி அதிக நாள் நீடிக்க வில்லை. அவர் பதவியிலிருந்து தூக்கி எறியப் பட்ட 19 மாதங்களுக்குள் திடீரென மீண்டும் தேர்தல் வந்தது.

தன்னை முழுமையாகத் தேர்தல் பணிக்கு அர்ப்பணித்துக் கொண்ட ராஜீவ் காந்தி, புதிய தெம்புடன், மக்களிடையே இடைவிடாமல் பிரசாரம் செய்தார். மக்கள் ராஜீவை முழுமை யாக நம்பத் தலைப்பட்டனர்.

ஒரு சமயம் இந்திரா காந்தி பேட்டி ஒன்றின் போது, "ராஜீவ் காந்தி, அவரது தம்பி சஞ்சையை விட மிகுந்த தன்னம்பிக்கை உடையவர்" என்று குறிப்பிட்டிருந்நார்.

ஆம்! ராஜீவின் நடைமுறையும் அவரது செயல்களும் அப்படித்தான் இருந்தன. இறுதி வரை தன்னம்பிக்கையை இழக்கவே இல்லை.

ராஜீவ் காந்தியை மீண்டும் தங்கள் தலைவ ராக ஏற்றுக் கொள்ள மக்கள் மனமாற்றம் பெற்ற போது, அவரது மரண தேதி குறிக்கப்பட்டு விட்டது

கிராமங்களிலும்; நகரங்களிலும் இடைவிடா மல் மக்களைச் சந்தித்துப் பேசி ராஜீவ் தன் கரத்தை வலுப்படுத்திக் கொண்டார். மீண்டும் தன் பக்கம் மக்கள் அதரவு பெருகி வருவதை அறிந்து மிகுந்த உற்சாகத்துடன் இடைவிடாமல் நாடெங்கும் தேர்தல் பணியாற்றினார். இரவில் அவர் அதிகமாக இரண்டுமணி நேரத்திற்குமேல் தூங்கியதில்லை. மீண்டும், காலையில், அன் றலர்ந்த ரோஜாவைப் போல் புதுத் தெம்புடன் புறப்பட்டு, தேர்தல் பணியாற்றினார். பத்திரிகை கள், ராஜீவின் வெற்றிக்கு நம்பிக்கை கொடியசைத் தன.

ராஜீவ்காந்தி மிகுந்த உற்சாகத்துடன், ஆந்திர சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு 1991-ம் ஆண்டு மே-மாதம் 21-ம் தேதி இரவு 8.20-க்கு ஸ்ரீபெரும்புதூரில் தேர்தல் பிரசாரத்திற் காக விமானத்தில் சென்னை வந்து சேர்ந்தார்.

கட்சிப் பிரமுகர்கள் ராஜீவ்காந்தியை வர வேற்று மாலை அணிவித்தனர்.

விமான நிலையத்தில் காத்திருந்த பத்திரிகை நிருபர்களுக்கு ராஜீவ்காந்தி அரைமணி நேரம்

உற்சாகமாக மகிழ்ச்சியுடன் பேட்டி அளித்தார். அதுவே அவரது கடைசிப் பேட்டி என்பது அப்போது யாருக்குத் தெரியும்?

பேட்டியின் போது ராஜீவ் காந்தி "இந்தத் தேர்தலில் அதிகமான வன்முறைகள் ஏற்படும்"— என்று குறிப்பிட்டார்.

அந்த வன்முறைக்குத் தானும் இரையாகக் கூடும் என்று அவரது உள்மனது அப்போது கூறியதோ என்னமோ!

இதே போல் தான்—

ஜான் கென்னடி தான் சுட்டுக் கொல்லப் படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு டெக்ஸாஸ் நகரிலுள்ள லவ்ஃபீல்டு விமான நிலையத்தில் ஒரு பேட்டியின் போது பின்வருமாறு கூறினார்.

"உண்மையிலேயே அமெரிக்க ஜனாதிபதியை சுட்டுக் கொல்ல யாராவது விரும்பினால்; அது ஒன்றும் அவ்வளவு கஷ்டமல்ல. என் உயிருக்கு விலையாகத் தன் உயிரைத் தர ஒரு கொலைகாரன் முடிவெடுத்தால் போதும்; நான் பிணமாவேன்."

கென்னடி இப்படிக் கூறுவதற்கு முன்பே அவர் விதி நிர்ணயிக்கப்பட்டு விட்டது. டெக்ஸாஸ் நகர வீதியில் அவர் காரில் சென்ற போது ஆறாவது மாடியிலிருந்து ஒரு கொலைக் காரன் அவரைச் சுட்டுக் கொன்றான்.

இதே போல் இந்திரா காந்தியும் கூறினார். 1984-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ம் நாள் ஒரிஸாவிலுள்ள புவனேஸ் நகரில் ஒரு பிரும் மாண்டமான பொதுக் கூட்டமொன்றில் அவர் பேசினார். எதிரே கூடியிருந்த லட்சக் கணக்கான மக்கள் முன்னிலையில், தனது ஆவேசமான சொற் பொழிவின் போது இந்திராகாந்தி பின் வருமாறு கூறினார்:

"இன்று நான் உயிரோடு இருக்கிறேன். நாளை ஒரு வேளை இருக்க மாட்டேன். இந்தியாவின் ஒற்றுக்மைகாக மதச் சார்பின்மைக்காக நான் இன்று இறந்தாலும் அந்த மரணத்தை மகிழ்வோடு ஏற்றுக் கொள்வேன். எனது ஒவ்வொரு சொட்டு இரத்தமும், இந்த பாரத நாட்டை பலப் படுத்த உதவும்'' என்றார்.

அதுவே அவரது கடைசி மேடைப் பேச்சா யிற்று. மறுநாள் 1984 அக்டோபர் 31-ம் நாள் காலையில் இந்திரா காந்தி சுட்டுக் கொல்லப்பட் டார். அவரது புனித உடலிலிருந்து பெருக்கெடுத் தோடிய தியாக ரத்தம் தீன்மூர்த்தி பவனிலுள்ள மண்ணில் உறைந்து நின்றது.

## ராஜீவ்காந்தி வாழ்க்கையின்
## கடைசி இரண்டு மணி நேரம்

இரவு 8.20 க்கு ராஜீவ் காந்தி சென்னை மீனம் பாக்கம் விமான நிலையத்தில் இறங்கினார். கட்சிப் பிரமுகர்கள் அவருக்கு மாலையிட்டு வரவேற்றனர்.

இரவு 8.40 க்கு விமான நிலையத்திலேயே நிருபர் களுக்கு அரைமணி நேரம் பேட்டி அளித்து விட்டு ஸ்ரீபெரும்புதூர் தேர்தல் கூட்டத்தில் பேசப் புறப்பட்டார்,

இரவு 9.00 வழியில் கத்திபாரா சந்திப்பு, நந்தம் பாக்கம், ஆகிய இடங்களில் மக்கள் அளித்த வரவேற்பை ஏற்றுக் கொண்டார்.

இரவு 9 15 போரூர் சந்திப்பில் ஏற்பாடு செய் திருந்த ஒரு கூட்டத்தில் பேசினார்.

இரவு 9.30 பூந்தமல்லியில் மக்கள் வரவேற்பை ஏற்றுக் கொண்டார்.

இரவு 10.10 ஸ்ரீபெரும்புதூரை அடைந்ததும் சாலை சந்திப்பில் உள்ள தன் அன்னை இந்திராகாந்தி சிலைக்கு மாலை அணிவித் தார்.

இரவு 10.20 காரிலிருந்து கீழ் இறங்கிய ராஜீவ் காந்தி ஸ்ரீபெரும்புதூரில் ஏற்பாடு செய்திருந்த பொதுக் கூட்ட மேடையை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் வழியில் மாலையிட்டு, மகிழ்ச்சியுடன் வரவேற்றுக் கொண்டிருந்த மக்களின் மத்தியிலிருந்தே ஒரு கொலைகாரியின் குண்டுக்கு பலியானார்.

உலகத்தையே அதிர்ச்சியுறச் செய்து இந்திய மக்களை சோகக்கடலில் ஆழ்த்திய துயரம் மிகுந்த சம்பவம்; தமிழக மண்ணில் நிகழ்ந்து விட்டது.


மகாத்மா காந்தி
ஆப்ரகாம்லிங்கன்
கென்னடி
மார்டின் லூதர்கிங்
இந்திரா காந்தி
ராஜீவ் காந்தி
இவர்களின்
தியாக வரலாறு
காயத்ரி
பப்ளிகேஷன்